Registered as a News Paper பக்கங்கள் 8 விலை: ரூபா 6.00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 கார்த்திகை 16 02 - 12 - 94 வெள்ளிக்கிழமை ஓசை 287

## இலங்கையில் 10 வீத சிறுவர்கள் பாடசாலைக்கு செல்வதில்லை

இலவசக் கல்வித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டும் இன்னும் பாடசாலைக்கே செல்லாத பத்து சதவீதமான சிறுவர்கள் இலங்கையிலுள்ளனர். இவ்வாறு கல்வி உயர்கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரான தெரிவித்துள்ளார். கதலுவ மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் பேசுகையில், பாடசாலைகளுக்கு நுழையும் பிள்ளைகளில் நூற்றுக்கு இரண்டு சதவீதமானோர் மட்டுமே பல்கலைக் கழகங்களுக்குள் நுழைகின்றனர். இந்த நிலையில் மிகுதி 98 சதவீதமானோருக்கு வாய்ப்புகிட்டாத நிலையில் அவர்களைப் பற்றி இதுவரை யாரும் சிந்தித்ததாக தெரியவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# அர்த்தமுள்ள தீர்வை காண்பதானால் புலிகளுடனேயே பேசவேண்டும்!

## வெட்டுப்புள்ளி

(யாழ்ப்பாணம்)

இவ் ஆண்டு நடைபெற்ற 5-ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில்வெளியாகிய முடிவுகளின்படி யாழ்மாவட்டத்திற்கான வெட்டுப்புள்ளி 142 ஆக உள்ளது-

ஒவ்வொரு மாவட்டத்திலும் இப் புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிய மாணவர்களில் உச்ச புள்ளிகளைப் பெற்ற பத்துவீதமான மாணவர்கள் புலமைப் பரிசில் பெற்றுக் கொள்வது குறிப்பிடத்தக்கது, (இ, தி, பா

## காமன்வெல்த் செயலர் கொழும்பு வந்துள்ளார்

(கொழும்பு)

காமன் வெல்த் அமைப்பின் பொதுச் செயலர் நான்கு நாள் அரசமுறைப் பயணம் மேற்கொண்டு சிறிலங்கா தலைநகர் கொழும்பு வந்துள்ளார்

கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பு வந்து சேர்ந்த செயலர் ஜனாதிபதி திருமதி சந்திரிகா குமாரதுங்கா உட்பட பல முக்கிய அமைச்சர்களையும் சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்துவார் என செய்திகள் தெரிவிக்கின்றன

## கொழும்பு மாவட்ட பா. உ தேவராஜ் நியமனம்

(கொழும்பு)

கொழும்பு மாவட்ட பாராளுமன்ற அங்கத்தவராக திரு. பி பி. தேவராஜ் நியமிக்கப்படவுள்ளார் என ஐ. தே. கட்சி வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

ஒஸி அபேகுணசேகரவின் மரணத்திற்கு பின்பு ஏற்பட்ட பாராளுமன்ற வெற்றிடத்தை நிரப்புவதற்கு இவரை நியமிக்க ஐ.தே. கட்சி முடிவு செய்துள்ளது இவர் விரைவில் பதவிப்பிரமாணம் செய்து கொள்வார் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

தேவராஜ் முன்னைய அரசாங்கத்தில் ராஜாங்க அமைச்சராக இருந்தவர் தற்போது இ. தொ. காவின் அரசியல் பிரிவு பிரதி தலைவராக விளங்குகின்றார்.

## படகுச்சேவை

கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

## ஜனாதிபதி சந்திரிகா கூறியதாக அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா

(கொழும்பு)

**இனப்பிரச்சினைக்கான சமாதானத் தீர்வை எய்துவதென்பது, விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம்நடத்தும்பேச்சுக்களினாலேயே அர்த்தம் உடையதாக இருக்கும். இதற்காகவே மீண்டும் சமாதானப்பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் தனது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக செய்தி வெளியிட்டுள்ள ''தினமின'' பத்திரிகை குறிப்பிடுகையில், நேற்றுமுன்தினம் விசும்பாயாவில்நடைபெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டின் போது சமாதான முயற்சிகள் தொடர்பான தனதுகருத்தை பத்திரிகையாளர்களுக்கு தெரிவிக்குமாறு அமைச்சரவைப் பேச்சாளரான தர்மசிறிசேன நாயக்காவை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பணித்ததாகவும் -

இதன்படி மேற்குறித்த செய்தியை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா பத்திரிகையாளர்களுக்கு அறிவித்ததாகவும் தினமின தெரிவித்துள்ளது.

ஜனாதிபதிசந்திரிகா குமாரதுங்கா பத்திரிகையாளர்களுக்கான தனது செய்தியில் வடக்கு - கிழக்குப் பிரச்சினையை சமாதானம் மூலம் தீர்க்க வேண்டும் என்பதில் அரசாங்கம் தெளிவாக இருப்பதாகவும் - இதற்கமையவே பூர்வாங்க நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துவருவதாகவும் தெரிவித்துள்ளதாக அமைச்சர் தர்மசிறி சேன நாயக்காவை மேற்கோள் காட்டி தினமின மேலும் குறிப்பிட்டுள்ளது.

## புலமைப் பரிசில்முடிவுகள் யாழ். வந்து சேர்ந்தன

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் நேற்று வெளியாகிய ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகளில் சென் ஜோன் பொஸ்கோ மற்றும் யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை ஆகியன முன்னணிப் பெறுபேறுகளை பெற்றுள்ளன

ஜோன் பொஸ்கோவில் இப் பரீட்சைக்கு 207 மாணவர் தோற்றினர் இவர்களில் 67 மாணவர்கள் சித்தியெய்தியுள்ளனர்

இப் பெறுபேறுகளில் ஆறு மாணவர்கள் 179இற்கும் 170 இற்கும் இடைப்பட்ட புள்ளிகளைப் பெற்றுள்ளனர் இதில் அதிகூடிய புள்ளியாகிய 179 ஐ ஏ.ஏ. நிசந்தன் பெற்றுள்ளார்

யாழ் இந்து ஆரம்ப பாடசாலையில் இருந்து 182 மாணவர்கள் தோற்றியுள்ளனர்- இவர்களில் 62 மாணவர்கள் சித்தியெய்தியுள்ளனர் இப் பெறுபேறுகளில் ஆறு மாணவர்கள் 181 இற்கும் 170 இற்கும் இடைப்பட்ட புள்ளிகளைப் பெற்றுள்ளனர் இதில் அதிகூடிய புள்ளியாகிய 181 புள்ளியை பி. செழியன் பெற்றுள்ளார்

யாழ் மாவட்டத்தில் அதிகூடிய புள்ளியாகிய 184 புள்ளியை சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை மாணவன் என் யசிந்தன் பெற்றார். இவர் அகில இலங்கையில் மூன்றாவது இடத்தை பெற்றுள்ளார் என்பது தெரிந்ததே

(பா, தி, இ)

## அரசாங்கத் தூதுக்குழுவில் முஸ்லிமுக்கும் இடம் தேவை

## கட்டான வீட்டில்

க. பொ. த. சாதாரண பரீட்சை;

## தற்காலிக அனுமதி அட்டை, 500 சுட். இலக்கங்கள் வந்தன

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 5ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள க. பொ. த.

பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகள் வந்து சேராமையைத் தொடர்ந்து யாழ்

ங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

துறையினர் அறிவித்துள்ளனர்.

## கட்டான வீட்டில் அதிநவீன ஆயுதம் மீட்பு

(கொழும்பு)

இராணுவத்தின் விசேட கொமாண்டோ படையினரிடம் கூட இருக்காத மிக நவீனரக தானியங்கி துப்பாக்கியொன்றை கட்டான பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து குற்றப்புலனாய்வு பொலிசார் மீட்டுள்ளனர்

இது தொடர்பாக குற்றப் புலனாய்வு பணியக பொறுப்பதிகாரியான கணேசநாதன் தகவல் தருகையில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திலிருந்த சிரேஷ்ட அமைச்சர் ஒருவருக்கு- நெருங்கிய தொடர்புடைய கும்பலொன்றுக்கே ஆயுதம் கண்டுபிடிக்கப்பட்ட வீடு தங்குமிடமாக இருந்து வந்ததாகவும் - கைப்பற்றப்பட்ட ஆயுதத்தின் பெறுமதி இரண்டு இலட்சம் ரூபாவுக்கும் அதிகமானது எனவும் தெரிவித்துள்ளார்

யாழ். மாவட்ட விளையாட்டுப்போட்டி

## சிறப்புற நடைபெற்ற பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட 94-ம் ஆண்டுக்கான வருடாந்த விளையாட்டுப் போட்டியில் வெற்றிபெற்றோருக்கான பரிசளிப்பு விழா யாழ் இந்து மகளிர்கல்லூரியில் நேற்று நடைபெற்றது

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் தேசியக்கொடியை ஏற்றி வைபவத்தை ஆரம்பித்து வைத்தார்

ஈகச்சுடரேற்றப்பட்டதைத் தொடர்ந்து -போட்டிகளில் வெற்றியீட்டிய வீரர்கள் மாவீரர்களின் உருவப்படங்களுக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் அரசியல்

( 7ஆம் பக்கம் பார்க்க )

## மன்னார் தீவினுள் சைப்பிரஸ் பறவைகள்

(மன்னார்)

மன்னார் தீவுக்கு சைப்பிரஸ் நாட்டிலிருந்து பறவைகள் வந்து தங்கத் தொடங்கியுள்ளன.

காலநிலை மாற்றங்களைத் தொடர்ந்து இப்பறவைகள் தங்களது சுவாத்தியத்திற்காக பல்லாயிரக் கணக்கான கிலோமீட்டர்களை கடந்து சைப்பிரஸ் பகுதியிலிருந்து வரத் தொடங்கியுள்ளன.

இப்பறவைகள் கரிசல், மன்னார் நகர்ப் பகுதிகளில் உள்ள குளங்களுக்கருகில் குடியமர்ந்துள்ளதாக தெரியவருகின்றது.

# முஸ்லிமுக்கும் இடம் தேவை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தைகளை நடத்தும் அரச தூதுக்குழுவில் முஸ்லிம் பிரதிநிதி ஒருவரை நியமிக்க வேண்டும் என புனர்வாழ்வுபுனரமைப்பு அமைச்சர் அஷ்ரப், ஜனாதிபதி சந்திரிகாவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜனாதிபதிக்கு இது குறித்து அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் முஸ்லிம்களின் நிலை தொடர்பாக புலிகளிடமிருந்து சாதகமான பதில் கிடைத்திருப்பதையிட்டு நாம் மகிழ்ச்சியடைந்திருக்கிறோம். வடக்கில் அதிக துன்பங்களுக்கு இலக்காகியவர்கள் முஸ்லிம்களே. அவர்கள் யாழ் குடாநாடு, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலிருந்து வெளியேற்றப்பட்டு புத்தளம், அனுராதபுரம், பொலநறுவை ஆகிய இடங்களில் அகதிகளாக வாழ்கின்றனர்.

எனவே இந்த குழுவில் முஸ்லிம் ஒருவரையும் நியமிப்பது அவசியமாகும் எனவும் அவர் அதில் சுட்டிக் காட்டியுள்ளார்.

# பல இடம், பலநாள் தவம்கிடந்து வந்துசேர்ந்த பரீட்சை முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்குடாநாட்டில் நேற்று வெளியாகிய ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் அதிகாரிகளின் கவனயீனத்தினால் பல இடங்களில் தவம் கிடந்தே யாழ் வந்து சேர்ந்தது,

கொழும்பில் இப்பெறுபேறுகள் வெளியாகியதைத் தொடர்ந்து கப்பல் மூலமாக யாழ்ப்பாணத்திற்கு இப்பெறுபேறுகள் அனுப்பிவைக்க பரீட்சைச் திணைக்களம் ஏற்பாடுகளை செய்திருந்தது ஆனால் வடக்கு - கிழக்கு மாகாண கல்வியமைச்சு தாம் இதை அனுப்புவதாக கூறி திருகோணமலை அலுவலகத்திற்கு இப் பெறுபேறுகளை எடுத்து வந்து வைத்திருந்தது,

இதைத்தொடர்ந்து இப் பெறுபேறு தரைவழியாகவவுனியாவரை வந்துசேர்ந்தது அங்கு கல்வி அலுவலகத்தில் ஒரு மூலையில் வைக்கப்பட்டிருந்தது இதனை அடுத்து வவுனியா வழியாக பயணம் செய்த யாழ் வலயம்1ஐ சேர்ந்த கல்வி அதிகாரி ஒருவர் தற்செயலாக மேற்படி கல்வி அலுவலகத்திற்கு சென்ற வேளை இப் பெறுபேறுகளை யாழ் கல்வித் திணைக்களம் கொண்டு செல்லுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார் அடுத்து இவர் இப் பெறுபேறுகளை கிளாலி ஊடாக நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாணம் கொண்டு வந்து சேர்த்தார் பின்னர் நேற்றுக்

( 7 ஆம் பக்கம் பார்க்க )

## மீன்வியாபாரிகள் விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கோட்டத்திற்குட்பட்ட நடமாடும் மீன் வியாபாரிகளுக்கான (துவிச்சக்கர வண்டிகளில மீன்வியாபாரம் செய்வோருக்கான) விசேட கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 10மணிக்கு கோண்டாவிலிலுள்ள யாழ்- மாவட்ட அரசியல் துறை செயலகத்தில் நடைபெறவுள்ளது- இக் கலந்துரையாடலில் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்- மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் அறிவித்துள்ளார்-

## யுனிசெப்பின் ஐந்தாண்டு சிறுவர் நலத் திட்டம்

(கொழும்பு)

வட-கிழக்கு மாகாணத்தில் யுனிசெப் நிறுவனம் சிறுவர்களின் போசாக்கு, கல்வி, எதிர்காலத் தொழில் வாய்ப்பு போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு ஐந்தாண்டு சிறுவர் நல திட்டமொன்றை செயற்படுத்தவுள்ளது-

மேற்படி திட்டத்தை அமுல் படுத்தும் போது அகதிமுகாம்களில் தங்கியுள்ள சிறுவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும், இதனடிப்படையில் தற்போது தொழில்நுட்ப பொறியியல் நிறுவனம் ஒன்று அகதிமுகாம்கள் தோறும் உள்ள சிறுவர்கள் தொடர்பான மதிப்பீடொன்றை மேற்கொண்டுளது-

அகதிமுகாம்களில் தங்கியுள்ள சிறுவர்களின் பெற்றோர்களை இழந்தவர்களின் விபரம், கல்வி, குடும்ப வருமானம் போன்ற விபரங்களை அது திரட்டி வருகிறது

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 5ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள க.பொ.த. [சா/தர] பரீட்சைக்கு விண்ணப்பித்து இதுவரை அனுமதி அட்டை வந்து சேராத பரீட்சார்த்திகளுக்கு தற்காலிக அனுமதிஅட்டைகளை வழங்க யாழ். கல்வித் திணைக்களத்திற்கு சுமார் ஐந்நூறு சுட்டிலக்கங்கள் பரீட்சைத்திணைக்களத்தினால் அனுப்பிவைக்கப் பட்டுள்ளது.

மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பித்த யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பலதனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகள் வந்து சேராமையைத் தொடர்ந்து யாழ் கல்வித் திணைக்களம் இப்பரீட்சார்த்திகளுக்கு தற்காலிக அனுமதி அட்டைகளை வழங்கவென பரீட்சை ஆணையாளரிடம் மேலதிக சுட்டிலக்கங்களை கேட்டிருந்தது

இதனை அடுத்தே 500 சுட்டிலக்கங்களை பரீட்சைத் திணைக்களம் வழங்கியுள்ளதாக யாழ் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (பா), (தி), (இ)

## கடலில் வீழ்ந்த பரீட்சை வினாத்தாள்கள்

### சுழியோடிகளால் மீட்பு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 5 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள க.பொ.த (சா/த) பரீட்சைக்கான வினாத்தாள்களில் ஒரு பகுதி நேற்று முன்தினம் பருத்தித்துறைக் கடலில் தவறி விழுந்து சுழியோடிகளினால் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் கப்பலில் இருந்து மேற்படி பரீட்சை வினாத்தாள்கள் இறக்கிக் கொண்டுவரும் வேளையே ஒருபகுதி கடலில் தவறிவிழுந்துள்ளது.

இவ்வினாத்தாள்கள் கடலில்விழுந்தமையைத்தொடர்ந்து சுழியோடிகள் கடலில் இருந்து சிலவற்றை மீட்டு கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்தவர்களிடம் ஒப்படைத்துள்ளனர் என தெரிவருகின்றது. [பா] [நி]

## இலங்கையில்143பேர்எயிட்ஸ் வைரசினால் பாதிப்பு

(கொழும்பு)

இலங்கையில் 143 பேருக்கு எயிட்ஸ் நோய்க்கான எச் ஐ வி. வைரஸ் தொற்றியுள்ளதென சுகாதார அதிகாரிகள். ஊர்ஜிதம் செய்துள்ளனர்- இவர்களில் 121 பேர் இலங்கையர் எனவும் ஏனைய 22 பேரும் வெளிநாட்டவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது-

சுகாதார அதிகாரிகளினால் தெரிவிக்கப்பட்டுள்ள புள்ளிவிபரங்கள் இவையாக இருந்த போதிலும் உண்மையில் எச்-ஐ-வி வைரஸினை தமது உடலில் கொண்டுள்ளவர்களின் எண்ணிக்கை மேலும் கூடுதலாக இருக்கக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

1997-ம் ஆண்டளவில் எச்-ஐ-விவைரஸினால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 70 ஆயிரத்துக்கும் கூடுதலாக அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது- எயிட்ஸ் நோயினால் இதுவரை 39 பேர் உயிரிழந்துள்ளனர். 1986-ம்ஆண்டிலேயே முதலாவது மரணம் சம்பவித்தது-

# வரி விளம்பரம்


**நீரிழிவு ஔடதம்**
நீரிழிவு நோயாளருக்கென பாவிக்கக் கூடிய ஆட்டாமா, குரக்குன்மா, ஒடியல் மா, மற்றும் வறுத்த உழுந்துமா, பச்சை உழுந்துமா, தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் பெற்றுக் கொள்ளுமிடங்கள்; அண்ணா கோப்பிக் கடை (யாழ்ப்பாணம், திருநெல்வேலி, இணுவில்) (சி-10676)

**விற்பனைக்குண்டு**
பிறிமா புறொயிலர் குஞ்சுகள் சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு சி. குலசிங்கம் இல 9, றக்கா வீதி (BARக்கு முன்பாக) யாழ்ப்பாணம். (10232)

**டிசம்பர் விடுமுறையில் பயிற்சி வகுப்புக்கள்**
கேக்ஐசிங், சமையற்கலை, ஒப்பனைக்கலையும் தலை அலங்காரமும் ஒருமாதகால வகுப்புக்கள் 5. 12. 94 திங்கள் முதல் ஆரம்பமாக உள்ளன. விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும். Yogi Home Science Academy 71, நாயன்மார் வீதி, கச்சேரி நல்லூர் றோட் நல்லூர். (10241)

**விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் மானிப்பாய் பிரதான வீதியில் 4-ம்கட்டையடியில் புக்கை தின்னிப் பிள்ளையார் கோயிலுக்கு முன்பாகக் கிணற்றுடன் அறுபது தென்னை மரங்களையுடைய 6 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- திருமதி ம. தர்மகுலேந்திரன், ஆசிரியர் சென்ற் ஆன்ஸ் றோ. க. பாடசாலை மானிப்பாய். (10258)

**விற்பனையாகிறது**
**1995- உங்களுக்கு எப்படி?**
உங்கள் பிறந்த திகதிப்படி 95-ம் ஆண்டில் நிகழப் போகும் பலாபலன்களை முன் கூட்டியே அறிந்து கொள்ளுங்கள். வேலணை சோதிடர் V.A. சிவராசா 152 B அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (10262)

மணிக்குரலின்
**ஷண் வீடியோ**
சிறப்பு அங்காடி [உட்புறம்] யாழ்நகர்
25 வருட கலைச் சேவை



தொழில்நுட்பம்- மதிநுட்ப வீடியோ படப்பிடிப்பிற்கு- 'ஷண் வீடியோ'
கொம்பாக்ட் டிஸ்க் பாடல் பதிவுகளுக்கு - 'ஷண்'
இயற்கை எழிலோடு கலர் படம் பிடித்திட - 'ஷண் போட்டோ'
திருமணம்- பிறந்தநாள் வாழ்த்துக்கள் விளம்பரங்கள் இசையுடனும் பாடலுடனும் இருகுரல்களில் பதிவு செய்துகொள்ள - 'ஷண்'



மணிக்குரலின்



**ஷண் றெக்கோடிங்ஸ்பொட்**
சிறப்பு அங்காடி [வைரவர் கோவில் அருகில்] யாழ்நகர்

எம்மிடம் ஐப்பசி மாதத்திற்கு முன் பதிவு செய்ய கொடுத்த கெசற்றுகளை நாம் பதிவு செய்தும் இதுவரை வந்துபெற்றுக் கொள்ளாதவர்கள் அவற்றை எதிர்வரும் 10 - 12 - 94க்கு முன்னதாக வந்து பெற்றுக் கொள்ளவும். ரசீது தொலைந்து போனாலும் ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளவும்.
- நிர்வாகி
(10226)

95ஆம் கல்வி ஆண்டிற்கான
**O/L, ஆண்டு 10, 9**
வகுப்புகளுக்கான
சனி - ஞாயிறு முழுநேர
புதிய வகுப்புக்கள்
ஆரம்பம்
**5-12-94 திங்கள் மாலை 4 மணி**

| | |
|---|---|
| கணிதம் | விஞ்ஞானம் |
| திரு. சதீஸ் | திரு. இரா. செல்வவடிவேல் |
| திரு. சங்கர் | திரு. தயாநிதி |
| ஆங்கிலம் | தமிழ் |
| திரு. கிரிதரன் | திரு. ஆர்த்திகன் |
| சமூகக்கல்வி | வர்த்தகம் |
| திரு. கியூபேட் | திரு. அற்புதராஜா |
| சைவசமயம் | கிறீஸ்தவம் |
| திரு. கிரிதரன் | திரு. கொலின்ஸ் |

அனுமதிகளை முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்
**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(சி-10818)

விப்ஜியோர்
(குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை)
**O/L**
விஞ்ஞானம்
**J.J.கொலின்ஸ்**
ஆரம்பம்:
4-12-94
ஞாயிறு காலை 9 மணி
(10255)


## பாடசாலைக்கு நிதி ஒதுக்கீடு

சங்கானை கல்விக்கோட்டத்தின் பாடசாலைகளில் தற்காலிக கொட்டகைகள் உள்ள சில பாடசாலைகளுக்கு அவற்றை வேய்வதற்கும், திருத்தி செப்பனிடுவதற்குமாக நிதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

வட்டு திருநாவுக்கரசு வித்தியாசாலை, சுழிபுரம் ஐக்கிய சங்க வித்தியாசாலை, வட்டு இந்துக்கல்லூரி, அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த பாடசாலை, வட்டுகார்த்திகேயவித்தியாசாலை என்பனவற்றின் தற்காலிக கொட்டகைகளே ஓலையால் வேயப்படவுள்ளன. (41)


**பத்தினித் தெய்வங்களும் பரத்தையர் வீதிகளும்**

தொன்று தொட்டு வரும் எமது பண்பாட்டு நாகரிகத்தின் காலப்பதிவுகள் இலக்கியங்களேயாகும். தொல்காப்பியர் முதல் சித்தர் வரையிலான காலப்பகுதியில் பண்பாடு, மதம், பாரம்பரியம் என்ற பெயரில் நிலவிய பெண்ணடிமைத்தனத்திற்கு அக்கால இலக்கியங்களே சாட்சி.

எல்லாக் கடைகளிலும் விற்பனையாகிறது
விநியோகம்:
**வசந்தம் புத்தக நிலையம்**
இது ஒரு பன்முக ஆய்வு நூல் (10242)


இலங்கை செஞ்சிலுவைச்சங்கம், யாழ்கிளை
தெல்லிப்பளைப் பிரிவின்

## நினைவு கூருகின்றோம்...

**02.12.1994**

1984ம் ஆண்டு இதே தினத்தில் ஜான்ஓயாப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு, படுகொலை செய்யப்பட்ட

★ **ராஜி** (லோறன்ஸ் ஆரோக்கியநாதன் - மட்டு)
★ **சீலன்** (முன்னம்போடிவெட்டை - திருமலை)
★ **மதுரவால்** (நகுலேஸ்வரன் - திருமலை)

1985ம் ஆண்டு மணலாறு -பட்டிக்குடியிருப்புப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**கப்டன் றெஜி** (சுப்பிரமணியம் மகேஸ்வரன் - காரைநகர்)

1988ம் ஆண்டு விசுவமடு - றெட்பானாப் பகுதியில் இந்தியப் படையினரின் சுற்றி வளைப்பில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**கர்ணன்** (செல்வநாயகம் மகாதேவன் புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவு)

அம்பாறை - அக்கரைப்பற்றுப் பகுதியில் இந்தியப் படையினரின் சுற்றிவளைப்பின்போது வீரச்சாவெய்திய,

**ஆனந்** (---)

சாவகச்சேரியில் தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

**தம்பிப்பிள்ளை சிவம்**

1990ம் ஆண்டு அம்பாறை - அறுகம்குடாப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய,

**ராஜன்** (--- சேனைக்குடியிருப்பு - கல்முனை - அம்பாறை)

1992-ம் ஆண்டு 24.11.92 அன்று பலாலியில் ஏற்பட்ட சமரின் போது விழுப்புண்ணடைந்த நிலையில் சிகிச்சைபெற்று வரும்போது வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். குலமகள் - ஜமீலா** (மாலா முருகையா - அளவெட்டி வடக்கு - யாழ்.)

வவுனியா - மன்னார் எல்லைப் பகுதிகளில் அமைந்திருந்த வண்ணாங்குளம், கந்துருவெல, வீரவெல, சிறிலங்கா இராணுவ முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய

**லெப். குரு-** (பூபாலபிள்ளை ரவி - அக்கரைப்பற்று அம்பாறை)
**லெப். அரவிந்தன்** (ராஜரட்ணம் சந்திரமோகன், பெரியபுல்லுமலை - மட்டு)
**ஜீவகுமார்** (சங்கரப்பிள்ளை கிரிதரன் - பெரிய-தம்பனை - வவுனியா)
**லெப். குணசீலன் - அனஸ்ரீன்** (சண்முகரத்தினம் சதீஸ்வரன் செம்மண்தீவு மன்னார்)
**லெப். சர்மா** (முத்தையா வீரதுரைசாமி விநாயகபுரம் - முழங்காவில்)
**2-ம் லெப். சரோஜன்** (சிதம்பரநாதன் சிவநேசன் மட்டுவில் நாடு மேற்கு - பூநகரி)
**கப்டன் நிமலன் - நிர்மலன்** (அந்தோனிப்பிள்ளை அருள்மரியராசா மணல்ஒழுங்கை -பருத்தித்துறை - யாழ்.)
**லெப். செல்வன்** (பாக்கியநாதன் செல்வநாதன் ஆஸ்பத்திரி வீதி - யாழ்.)
**லெப். ஜெயா** (சண்முகராசா சிவகுமார் (தயா) வேலணை)
**2-ம் லெப். மதியழகன்** (சுப்பிரமணியம் கஜேந்திரன் உடுவில் வீதி, மானிப்பாய் - யாழ்)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலும், கடற்பரப்பிலும் சிறிலங்காப் படையினராலும், தேசவிரோதிகளாலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்

ஆகியோரை இந்நாளில்

சடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (10262)

காலமானார்

(கொழும்பு)

கல்வி கலாசார அமைச்சு பிரதி செயலாளரும் வடக்கு-கிழக்கு மாகாணசபை கிராம அபிவிருத்திப் பணிப்பாளருமான சின்னத்தம்பி சடாச்சர சண்முகதாஸ் (வயது 49) நேற்று முன்தினம் கொழும்பில் காலமானார்.

இவர் முன்னாள் உள்துறை அமைச்சின் செயலாளராகவும் யாழ் செயலக தலைமைப் பீட உதவி அரசாங்க அதிபராகவும் பதவிவகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கை செஞ்சிலுவைச்சங்கம், யாழ்கிளை தெல்லிப்பளைப் பிரிவின் ஒத்திவைக்கப்பட்ட தேர்தல் 1994

20-11-94இல் நடைபெறவிருந்த மேற்படி தேர்தல் 11-12-94 (ஞாயிற்றுக்கிழமை) மு.ப. 10-00 மணிக்கு யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தில் யாழ் கிளையினால் நடாத்தப்படும். வாக்காளர்கள் உரிய நேரத்தில் இதில் தவறாது பங்குபற்றும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (இவ்வழைப்பிதழ் தனித்தனியாக வாக்காளர்களுக்கு அவர்கள் நிரந்தர விலாசத்திற்கு தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது)

நன்றி.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்,
01-12.1994

செஞ்சிலுவைச் சேவையில்,
கௌரவ செயலாளர்,
[சி-10819]

விநியோகம்:

வசந்தம் புத்தக நிலையம்

இது ஒரு பன்முக ஆய்வு நூல் (10242)

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

# COMPUTER PROGRAMMING

IN

BASIC LANGUAGE

*IAB - FINAL*

SHORT - HAND & TYPING

விபரங்கட்கு

# SCHOOL OF BUSINESS ADMINISTRATION

**16, 3RD CROSS STREET, JAFFNA.**

(சி-10817)

2-ம் லெப். மதியழகன் (சுப்பிரமணியம் கஜேந்திரன் உடுவில் வீதி, மானிப்பாய் - யாழ்)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலும், கடற்பரப்பிலும் சிறிலங்காப் படையினராலும், தேசவிரோதிகளாலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறியிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்கள்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி- 10815)

# எடிசன் அக்கடமி

(யாழ். இந்து அருகில்)
411/1, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(கொக்குவில் இந்து அருகில்)
27, கே. கே. எஸ். வீதி,
கொக்குவில்.

## கல்வி ஆண்டு - 1995

### ஆண்டு 4 முதல் O/L வரையான வகுப்புகள்

| | |
|---|---|
| கணிதம் | - B.P. பாஸ்கரன் |
| விஞ்ஞானம் | - J.J. கொலின்ஸ்<br>- N. மகேந்திரன் |
| சமூகக்கல்வி | - K.S. முத்துலிங்கம் |
| தமிழ் | - S. கதிர்காமத்தம்பி |
| ஆங்கிலம் | - J. மனோரஞ்சன் |
| வர்த்தகம் | - A. விக்கி |
| சமயம் | - K. இராஜலிங்கம் |

| | |
|---|---|
| கணிதம் | - B.P. பாஸ்கரன் |
| விஞ்ஞானம் | - N. மகேந்திரன்<br>J.J. கொலின்ஸ் |
| சமூகக்கல்வி | - க. கோபி |
| தமிழ் | - S. கதிர்காமத்தம்பி |
| ஆங்கிலம் | - C. சத்தியமூர்த்தி |
| வர்த்தகம் | - T- அரவிந்தன் |
| சமயம் | - K. இராஜலிங்கம் |

★ O/L இற்கு கணிதம் - விஞ்ஞானத்தில் ஆண்டு 9, 10 பாடத்திட்டமும் மீட்கப்படும்

**ஆரம்பம்: 04.12.1994 ஞாயிறு மு.ப. 9.30**

(சி-10820)

# கண்ணீர் அஞ்சலி

சின்னத்தம்பி சடாச்சர சண்முகதாஸ் கல்வி, கலாசார அமைச்சின் பிரதிச் செயலாளர், கிராம அபிவிருத்தி பணிப்பாளர் (வடக்கு, கிழக்கு மாகாண சபை) அவர்கள் 30-11-94 அன்று கொழும்பில் காலமானதையிட்டு எமது ஆழ்ந்த துயரத்தை அன்னாரின் குடும்பத்தினருக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.

மாவட்ட உத்தியோகத்தர்,
கிராம அபி விருத்தி உத்தியோகத்தர்கள்,
கிராம அபிவிருத்தி போதனாசிரியர்கள்,
யாழ். மாவட்டம்.

01-12-1994

(10259)

# 2-ம் ஆண்டு நினைவில்



தாயின்மடியில்
மணியாய்
09-09-1972

தமிழ்த்தாய் முடியில்
அணியாய்
24-11-1992

## லெப். லிங்கம்-ரமணலிங்கம்

(இராசேந்திரம்-பாஸ்கரன்)

கம்பர்மலை-வல்வை

திதி: 02-12-1994

முதல்புலியின் ஊரினிலே முகிழ்த்திட்ட மாதவனே!
மண்போற்றும் புகழ்கொண்ட மாசில்லா ஆதவனே!
சாதல் வீரனுக்கு இலையென்று மொழிந்தவனே!
சிங்களப் பகையடக்க சமராடி அழிந்தவனே!

மறைந்து நீபோனாலும் மறப்போமா நின்நினைவை
மறவேங்கை வழிதொடர்வோம் முடிப்பதற்காய்
நின்கனவை
உறைந்து நீ இருக்கின்றாய் இதயத்தில்
என்றென்றும்
உலகமிது நிலைக்கும்வரை உன்நினைவு
வாழுமய்யா.

இங்ஙனம்
குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள்

(10207)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# 'பொசுனியச் சிக்கலை தீர்க்க முனைந்த மேற்குலகே இப்போது சிக்கலின் ஒரு பகுதியாகிவிட்டது'

26 8-94 ம் திகதிய வெள்ளி மஞ்சரியில் பொசுனியா தொடர்பான கட்டுரையில் நம்பிக்கையூட்டும் செய்திகள் அங்கிருந்து வருவது பற்றி குறிப்பிட்டிருந்தோம். மேற்குலக படையெடுப்பை நம்பியிருந்த பொசுனிய முசுலிம்கள் தம் கையே தமக்குதவிஎன்பதைஉணர்ந்ததால் சில இராணுவ வெற்றிகளைப் பெற்றது பற்றியும் எழுதியிருந்தோம். அத்தோடு இதுவரைகாலமும் பொசுனிய சேர்பியரின் கொடுங்கோன்மைக்குதவியளித்து வந்த சேர்பிய சனாதிபதி மிலோசவிச் உலக அழுத்தம், அதன் பொருண்மியத் தடை காரணமாக அவர்களை கைகழுவி விட்டதுபற்றியும் கூறினோம். இப்போது என்னவென்றால் இத்தகைய மாற்றங்களால் வெகுண்ட பொசுனிய சேர்பியர் மீண்டும் தமது அடாவடித்தனங்களை இன்னமும் வலுவிழக்காத தமது இராணுவ மேலாண்மையை பயன்படுத்தி பொசுனிய முசுலிம்கள் மேல் கட்டவிழ்த்து விட்டுள்ளனர். இதனால் முசுலிம்களின் அவலக் கதை நீடிப்பதோடு ஐ. நா.வின் முகத்திலும் பெரும் கரியை அள்ளிப்பூசப்பட்டதோடு வான் வெளித்தாக்குதலை நிகழ்த்தி அச்சுறுத்த முனைந்த மேற்குலக இராணுவ கூட்டமைப்பானநேட்டோவுக்கும் தீராத அவமானத்தை ஏற்படுத்திவிட்டது. அண்மைக்கால பொசுனியச் சேர்பியரின் ஆக்கிரமிப்புக்கள் மேற்குலக அரசியலை பெருத்த இக்கட்டுக்குள் தள்ளிவிட்டும் விட்டது.

## வென்றதை இழந்த பொசுனிய முசுலிம்கள்

இம்மாதத் தொடக்கத்திலே தான் பொசுனிய முசுலிம்கள் இராணுவ ரீதியான பெரு வெற்றியொன்றை அடைந்திருந்தனர். பொசுனிய கேர்சகோவினாவின் 70 விழுக்காட்டு நிலத்தை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் சேர்பியர் மேல் திடீரென வியக்கத்தக்க முறையில்- பொசுனியாவின் வடமேற்குப் பகுதியின் பிரதான நகரான பீகச்சை (Bihac) சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து ...யருக்கு பெரும் தோல்வியாக இப்போர் முடிந்தது. பொசுனிய சேர்பியரின் போர்உறுதி குன்றி விட்டதாக அப்போது கூறப்பட்டது. அத்தோடு சேர்பியாவின் உதவிகள் நிறுத்தப்பட்டதன் பாதகமான விளைவுகள் இதற்கு காரணம் என்றும் கூறப்பட்டது. ஐ நா.வின் பாதுகாப்பு வலயங்களுள் ஒன்றான பீகச் நகரைச் சுற்றிய மோதலை ஐ. நா. ஆட்சேபித்த போதும் இழந்த மண்ணை மீட்க பொசுனியாவின் அரசு போர் தொடுப்பதை தான் தடுப்பது இயலாத வேலை எனக்கூறியது. ஆனால் இப்போது எல்லாம் தலைகீழாகி விட்டது. பெருமளவில் பின்வாங்கிய சேர்பியர் தமது வலிமை யாவற்றையும் ஒன்று சேர்த்து மிகத் தீவிரமான தாக்குதலை பீகச் நகரைச் சுற்றியிருந்த பொசுனிய அரச படைகள் மீது தொடுத்தனர். இப்போது நடைபெறும் மோதலில் பொசுனிய சேர்பியர் தாம் இழந்த யாவற்றையும் திரும்ப பெற்றதோடு ஐ நா வின் பாதுகாப்பு வலயமான பீகச் நகருக்குள் நுழைந்தும் விட்டனர். இதனால் பெரும் அச்சம் கொண்ட பீகச் நகர மக்கள் தலைதெறிக்க தப்பியோடுகின்றனர். தாங்கமுடியாத மனித அவலம் இங்கே நிகழ்வதாக சருவதேச செஞ்சிலுவைச்சங்கம் கூறுகின்றது அதுமட்டுமன்றி ஐ. நா,வின் ஆணைப் பகுதிக்குள்ளே நுழைந்ததால் ஐ. நாவின் எதிர்காலப் பணிகளே கேள்விக் குறியாக்கி விடப்பட்டும் விட்டது. அத்தோடு குரோசியாவில் இன்னமும் தமது கட்டுப்பாட்டிலிருக்கும் பகுதியிலிருந்து சேர்பியர் இத்தாக்குதலை மேற்கொண்டதால் அப்பகுதிநிலைகள்மீதேநேட்டோ அமைப்பின் மிக நவீன குண்டு வீச்சு விமானங்கள் மூலம் பெரும் குண்டுகளை வீசிய போதும் எப்பயனும்அதனால் கிட்டவில்லை இப்போதுஎன்ன வென்றால் கிழக்குப் பொசுனியாவில் பலநூற்றுக்கணக்கான ஐ.நா.வின் அமைதிப்படையினரை தடுத்து வைத்திருக்கும் பொசுனியச் சேர்பியர் மேற்கொள்ளும் தமது நிலைகள் மீதான வான்வெளித் தாக்குதல்களை இதனால் தள்ளிப்போட வைத்தும் விட்டனர். இப்போது பொசுனிய சேர்பியரின் முன்னேற்றத்தை தம் ...

மாக கனரக ஆயுதங்கள் கிடைக்கும் நிலைமைகள் தோன்றின. அமெரிக்காவின் மறைமுக ஆதரவோடு குரோசியாவுக் கூடாக துருக்கி, ஈரான் போன்ற நாடுகளிலிருந்து பெருமளவு ஆயுதங்கள் கொண்டு வரப்பட்டன. அண்மைக்காலமாக பொசுனிய முசுலிம்கள் நல்ல காலணிகளையும் புதிய ரக AK 47ரக துப்பாக்கிகளையும் தாங்கித் திரிவதாக செய்தியாளர் கூறினர். இதற்கிடையில் அமெரிக்காவின் இராணுவ அதிகாரிகள் பொசுனிய முசுலிம்கட்கு உதவுவதாகக்கூட செய்திகள் வெளி வந்தன. ஆனாலும் உடனடியாக பொசுனிய இராணுவத்தினர் இவற்றினால் முற்றிலும் நன்மை அடையத்தக்கதாக இல்லையென்றே இப்போது கருதப்படுகின்றது. இதற்கு இரண்டு பிரதான காரணங்கள் கூறப்படுகின்றன. நீண்ட காலமாக தக்க பயிற்சிகளின்றிஇருக்கும் பொசுனிய இராணுவத்திற்கு தாங்கிகள், கவசவாகனங்கள், கனரக பீரங்கிகள் போன்றவற்றை திறமையாக இயக்க பயிற்சி கொடுக்க அதிக காலம் பிடிக்கும் என்றும் எனவே புதிய ஆயுதங்கள் வருகைக்கும் - இவர்கள் பெறவேண்டிய பயிற்சிக்கான இடைவெளிக்காலத்தை பொசுனியச் சேர்பியர் பயன் படுத்தி மேலும் வெற்றிகளைப் பெற முடியும் என்றும் இராணுவ ஆய்வாளர்கள் இப்போது கூறுகின்றனர். அத்தோடு அமெரிக்கா இப்போது பொசுனிய முசுலிம்கட்கு எதிரான ஆயுதத்தடையை நீக்க முற்பட்ட போதும் கடந்த 3 வருடங்களாக ஆயுதத்தடை நீக்கப்பட வேண்டும் என்று மிகக் கடுமையாக உலகை கோரி வந்த பொசுனிய அரசு இப்போது சற்றுப் பின்வாங்குகின்றது. இதற்கு காரணம் இவ்வாயுதத் தடை நீக்க முடிவு அமெரிக்காவால்மட்டுமேஎடுக்கப்பட்டிருப்பதாலும் இம்முடிவுக்கு மிகக்கடுமையான எதிர்ப்பை பிரான்சு, பிரித்தானியா போன்றவை காட்டுவதும் தமது துருப்புக்களை அவ்வாறான நிலையில் திரும்பப் பெற்றுவிட நேரிடும் என அச்சுறுத்துவதும் இதனால் ஐ. நா.வின்மனிதாபிமானப்பணி முற்றிலுமாக நிறுத்தப்படும் நிலை தோன்றிவிடும் என்பதேயாகும். இப்போது பொசு ...

யாக எல்லாத் தரப்பாலுமே இப்போது எதிர்க்கப்படுகின்றது. முன்னாள் யூகோசிலேவிய பகுதிகளில் இப்போது தனது படைகள் எதுவுமில்லாத நிலையில் அமெரிக்கா தன்னிச்சையாக வீராப்பாக எடுக்கும் முடிவுகள் அதிகம் படைகளை வைத்திருக்கும் பிரித்தானியா (3160) பிரான்சு (4450 கனடா (2040) போன்றவை தம்மையே பாதிக்குமென கருதுகின்றன. ஒரு பிரான்சிய அதிகாரி இதுபற்றி மிகக் கோபமாக கூறுகையில் பொசுனியாவிலிருந்து நாம் கற்ற பாடம் என்னவென்றால் அங்கு அமெரிக்கப் படையினர் எவரும் இல்லை என்பதே என்றார்.

அதேசமயம் சனாதிபதி கிளின்டனுக்கோ அமெரிக்க கொங்கிரஸ் போடும் அழுத்தத்தால் எதுவும் செய்ய முடியாதநிலை. பொசுனியாவிற்கு படைகளை அனுப்பவோ, அங்கு பணிபுரியும் ஐ.நா. படைகட்கு நிதியுதவி அளிப்பதையோ அமெரிக்க மக்கள் அவையும் செனற்றும் சற்றும் விரும்பவில்லை. இதற்கிடை

அமெரிக்க போர்க் கப்பல்களை விலக்கிக்கொள்வதாகவும் அறிவித்தது. இத்தகைய முடிவினை கிளின்டன் எடுத்த போதும் இம் முடிவினை ஐரோப்பிய நாடுகட்கு பாதிப்பில்லாமல் மெல்ல நடைமுறைப்படுத்தலாம் என கிளின்டன் எண்ணிய எண்ணம் இப்போது மண்ணாகி விட்டது. ஏனென்றால் இப்போது அண்மையில் அமெரிக்காவில் நடந்த தேர்தலின் பின் அமெரிக்க மக்கள் அவையிலும் செனற்றிலும் குடியரசுக் கட்சியே என்றுமில்லாதவாறு பெரும்பான்மையைப் பெற்று விட்டது. புதிய நிலைவரம்-செனற்றில்குடியரசுக் கட்சியைச் சேர்ந்தோர் 53 ஆகவும் (முன்னர் எழுதப்பட்ட கட்டுரையொன்றில் இவ்வெண்ணிக்கை 51 என குறிப்பிட்டது. எம்முடைய தவறாகும்) சனநாயகக் கட்சியைச் சேர்ந்தோர் 47 ஆகவும் மக்களவையில் சனநாயகக் கட்சியினர் 199 இடங்களைக் கொண்டதாகவும் குடியரசுக் கட்சியினரோ 227 உறுப்பினரைக் கொண்டதாக பெரும்பான்மை பெற்று விட்டனர்.




பாலகுமாரன்

யில் அமெரிக்க நிருவாகத்தினரோ ஐரோப்பிய நாடுகள் வரவர கூடுநல் முசுலிம் எதிர்ப்புணர்வு கொண்டவராக அவர்கள் தங்களை பாதுகாக்க எடுக்க முயலும் தற்காப்பு நடவடிக்கைகளை தடுப்போராக மாறி வருவதாக குற்றம் சாட்டுகின்றனர்.

எனவே ஐ.நா.வில் பேசும் போது சனாதிபதி கிளின்டன் கடந்த அக்டோபர் 15-ம் திகதிக்குள் இறுதியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள 51-49 விழுக்காட்டு அமைதித்திட்டத்தை (இத்திட்டம் 51 விழுக்காட்டு பொசுனியப் பகுதியை பொசுனிய முசுலிம்கள் குரோசியர்க்கும் 49 விழுக்காட்டை பொசுனிய சேர்பியர்க்கும் பங்கிடுகின்றது. சேர்பியர் ஏற்காவிட்டால் பொசுனிய முசுலிம்கட்கு எதிரான ஆயுதத்தடையை ஐ. நா. நீக்க ...

அதிலும், இப்போது செனற்சபையின் அதிகாரம் மிக்க தலைவரான குடியரசுக் கட்சியாளரான பொப் டோலும் (Bob Dole) மக்களவையின் செல்வாக்குமிக்க புதிய சபாநாயகராகப்போகும் செல்வாக்கு மிக்க நியூட் ஜிஞ்சரிச்சும் (Newt Gingrich) பொசுனியாவில் இருந்து ஐ. நா. படைகள் உடனடியாக வெளியேற வேண்டும் என்றும் பொசுனிய முசுலிம்கட்கு எதிரான ஆயுதத்தடை உடனடியாக நீக்கப்படவேண்டும் என்றும் கடுமையாக குரல் கொடுக்கின்றனர். நேட்டோவை, ஐ. நாவை மிகக் கடுமையாகக் குறைகூறும் இவர்கள் போக்கு ஐரோப்பிய நாடுகளிடையே பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியும் கிளின்டனால் எதுவுமே செய்யமுடியாத நிலையும் தோற்றி விட்டது. புதிய அமெரிக்க அதிகாரச் சமநிலையின் ...

முரண்பாடுகள் முனைப்படைகின்றன.

பொசுனிய முசுலிம்கட்கு எதிரான ஆயுதத் தடை நீக்குவதை முற்றாக பிரித்தானியா, பிரான்சு ருஷ்யா, போன்றவை வெவ்வேறு காரணங்கட்காக விரும்பவில்லை. ஆயுதங்கள் தடை நீக்கப்பட்டு போர் முனைப்படைந்தால் தமது நாட்டு படை வீரர் இடையில் சிக்கி இறக்க நேரிடும் என்பதும் பொசுனிய முசுலிம்கள் கையோங்கும் நிலையில் பெருமளவு ஆயுதங்கள் அதற்குக் கிடைக்கும் நிலையில் பொசுனிய சேர்பியத் தலைவர் றடோவான் காஜிச்சுக்கு மீண்டும் சேர்பியா உதவக்கூடும் என்கிற அச்சமும் பிரித்தானியா, பிரான்சு போன்ற நாடுகளை பிடித்தாட்டுகின்றது. அத்தோடு ருஷ்யாவின் போக்கும் இப்போது மிக வேறுபட்டதாகி விட்டது. தமது சக சிலவிய (SLAVS) இனத்தை சேர்ந்த சேர்பியரை கைவிட இன்னமும் தயாராகாத நிலையில் ருஷ்யாவும், பொசுனியா சேர்பியருக்கு உதவ முன்வரலாம் என்றும் ...

மேற்குப் பொசினியாவிலும், சேர்பியரால் சூழப்பட்டு ஐ. நாவின் நிவாரண உணவு உதவிகளில் முற்றிலும் தங்கியிருக்கும் பகுதிகள்பெரும் இக்கட்டான நிலையைஅடைய நேரிடும் என்பதேஇச்சிக்கலின் இன்னொரு பரிமாணமாகி விட்டது. எனவே இத்தகைய நிலையில் ஆயுதமா?உணவா? என்கிறதொருகேள்வி பொசுனிய அரசின் முன்னே தோன்றிவிட்டது. அதே சமயம் பொசுனிய சேர்பியரை ஒரு தீர்வுக்கு கொண்டுவரத்தக்க அழுத்தத்தை இன்னமும் மேற்குலகால்பிரயோகிக்கவும் முடியவில்லை. அதே சமயம் ஐ.நா. ஆயுதத்தடையை நீக்காத நிலையில் ஏற்றியாட்டிக் கடலில் அமெரிக்கா தவிர்ந்த ஐரோப்பிய நாடுகளின் போர்க்கப்பல்கள் கண்காணிப்பை மேற்கொள்ளும்நிலையும் இப்போதுள்ளது.

இவை இவ்வாறாக இருந்த போதும் போதிய பயிற்சியும் தேவையான கனரக ஆயுதங்களும் கிடைக்குமிடத்து பொசுனிய முசுலிம் குரோசிய கூட்டுப்படைகளால் இரா ...

விழுக்காட்டு நிலத்தை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் சேர்பியர் மேல் திடீரென வியக்கத்தக்க முறையில்- பொசுனியாவின் வடமேற்குப் பகுதியின் பிரதான நகரான பீகச்சை (Bihac) சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து சேர்பியரை விரட்ட-பெரும் தாக்குதலை முசுலிம்கள் மேற்கொண்டிருந்தனர். முதல் தடவையாக பொசுனிய முசுலிம்களின் அரசபடை தாங்கிகள், பீரங்கிகள் போன்றவற்றைப் பயன்படுத்தி பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட சேர்பிய மக்களையும் சேர்பிய இராணுவத்தையும் இப்பகுதியிலிருந்து விரட்டி 260 சதுர கிலோ மீற்றர் பரப்பளவு மண்ணை மீட்டனர். சேர்பி பொசுனியச் சேர்பியர் மேற்கொள்ளும் தமது நிலைகள் மீதான வான்வெளித் தாக்குதல்களை இதனால் தள்ளிப் போடவைத்தும் விட்டனர். இப்போது பொசுனிய சேர்பியரின் முன்னேற்றத்தை தம்மால் தடுக்க முடியாதென நேட்டோ அமைப்பேகூறிவிட்டது. இதற்கிடையில் பொசுனியா தொடர்பாக மேற்குலக நாடுகட்கும் அமெரிக்காவுக்கும் ருஷ்யாவுக்குமிடையில் பெரும் பிளவுகளும் இப்போதுதோன்றிவிட்டனஇவற்றால் மீண்டும்பொசுனிய முசுலிம்அரசே பெரிதும் பாதிக்கப்பட்டு விட்டது.

ஏனென்றால் பொசுனிய முசுலிம்கட்கு அண்மைக் கால வாறான நிலையில் திரும்பப் பெற்றுவிட நேரிடும் என அச்சுறுத்துவதும் இதனால் ஐ. நா.வின்மனிதாபிமானப்பணி முற்றிலுமாக நிறுத்தப்படும் நிலை தோன்றிவிடும் என்பதேயாகும். இப்போது பொசுனியாவில் தலையிட்ட நேட்டோ, ஐ நா. அமெரிக்கா, ருஷ்யா இவர்களின் ஒன்றுக்கொன்று மிக முரண்பட்ட போக்கால் பொசுனியாவின் நிலை மேலும் இப்போது குழப்பகரமானதாகி விட்டது.

### ஊர் இரண்டுபட்டால்..

பொசுனியா தொடர்பான அமெரிக்காவின் போக்கு என்றுமில்லாதவாறு மிகக்கடுமை பொசுனிய முசுலிம்கள் குரோசியர்க்கும் 49 விழுக்காட்டை பொசுனிய சேர்பியர்க்கும் பங்கிடுகின்றது. சேர்பியர் ஏற்காவிட்டால் பொசுனிய முசுலிம்கட்கு எதிரான ஆயுதத்தடையை ஐ. நா. நீக்க வேண்டும் எனக் கோரியபோது அதற்கு மிகக்கடுமையான எதிர்ப்பு ருஷ்யா, பிரான்சு, பிரித்தானிய தரப்பிலிருந்து வந்தது. எனவே இப்போது அமெரிக்கா மட்டுமே இத்தடையை தான் நீக்கி விட்டதாகவும் இதுவரை காலமும் ஏட்ரியாட்டிக்கடலில் ஆயுதங்கள் கப்பல்களில் வருகின்றதா என்பதைக் கண்காணிப்பதில் ஈடுபட்டிருந்த இவர்கள் போக்கு ஐரோப்பிய நாடுகளிடையே பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியும் கிளின்டனால் எதுவுமே செய்யமுடியாத நிலையும் தோற்றிவிட்டது. புதிய அமெரிக்க அதிகாரச் சமநிலையின் விளைவு இது. இவ்வாறான சிக்கலெல்லாம் பொசுனிய மக்களுக்கே தீங்காகின்றது. எனவே இப்போது முன்னெப்போதும்இல்லாதஅளவில்மேற்குலகம் பொசுனியா தொடர்பாக இரண்டுபட்டுவிட்டது. ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம் என்பது போல் சேர்பியர் தமது விருப்பத்தையே செயற்பட வாய்ப்பாகியும்விட்டது.

தாகி விட்டது. தமது சக சில விய (SLAVS) இனத்தை சேர்ந்த சேர்பியரை கைவிட இன்னமும் தயாராகாத நிலையில் ருஷ்யாவும், பொசுனியா சேர்பியருக்கு உதவ முன்வரலாம் என்றும் கருதப்படுகின்றது. அத்தோடு ஆயுதத்தடை முற்றாக நீக்கப்பட்டால் தான் உடனடியாகத் தனது அமைதிப்படைகளை பொசுனியாவிலிருந்து விலக்கி கொள்வேன் என்றும் பிரித்தானியா கூறி வருகின்றது. பிரித்தானியா விலகினால் பிரான்சும் உடனே வெளியேறத் தயாராகவுள்ளது. இந் நிலையில் ஐ. நா வினால் பிரகடனப்படுத்தப்பட்ட பாதுகாப்பு வலயங்களும்கிழக்குபொசுனியாவிலும்

இவை இவ்வாறாக இருந்த போதும் போதிய பயிற்சியும் தேவையான கனரக ஆயுதங்களும் கிடைக்குமிடத்து பொசுனிய முசுலிம் குரோசிய கூட்டுப்படைகளால் இராணுவ வெற்றிகளை அடைய முடியும் என்பது இப்போது நிருபணமாகிவிட்டதுஆனால் பொசுனிய விவகாரங்களில் தலையிட்ட அமெரிக்கா ஒரு திசையிலும் ஐரோப்பிய நாடுகளோ இன்னொரு திசையிலும் இவை இரண்டிற்கும் புறம்பாகஐ.நாவோ வேறொரு திசையிலுமாக முரண்பட்டு நிற்பதால் பொசுனிய சிக்கல் எதிர்காலத்தில் என்ன

(7ஆம் பக்கம் பார்க்க)

# மேற்குலகின் பிடிக்குள் சிக்கிவிட்ட பொன்விழா காணும் ஐ. நா. சபை

1995 இல் பொன்விழா ஆண்டில் காலடி பதிக்கும் ஐக்கிய நாடுகள் சபை தனது குறிக்கோளில் வெற்றியை எட்டியுள்ளதா அல்லது உருவாக்கியவர்களின் கைப்பொம்மையாகி விட்டதா என்ற கேள்வி இன்று உலகின் பல பாகங்களிலும் கேட்கத் தொடங்கியுள்ளது.

இங்கிலாந்து, ரஷ்யா, பிரான்ஸ், அமெரிக்கா ஒரு புறமும் ஜேர்மனி, அவுஸ்திரேலியா, கங்கேரி, துருக்கி, இத்தாலி மறுபுறத்திலும் நின்று நடத்திய கொடூரமான யுத்தம் முதலாம் உலகயுத்தம். அந்த யுத்தத்திலே இறந்தவர்கள் ஒரு கோடி. காயமடைந்தோர் பல கோடி. இங்கிலாந்திற்காக போரிட்ட 60 ஆயிரம் இந்தியர்கள் கூட பலியாகியுள்ளனர். 60 ஆயிரம் கோடி சொத்துக்கள் நாசமாகியதுடன் வீடுகள், தொழிற்சாலைகள், விளைநிலங்களும் அழிந்தன கொள்ளை நோயும் உணவுப் பஞ்சமும் கொடிகட்டிப் பறந்தன.

இத்தகைய கொடிய யுத்தத்திற்குப் பிறகாவது போர் ஒழிந்ததா என்றால் இல்லை. 1931 இல் ஜப்பான்- சீனாவிற்கிடையில் சண்டை. 1935 இல் இத்தாலி எதியோப்பிய யுத்தம். 1938 இல் ஜேர்மனி ஒஸ்திரிய போர். அதன்பின் தொடங்கியது உலகத்தையே கதிகலங்கவைத்த இரண்டாவது உலக மகா யுத்தம். 1939 செப்ரெம்பர் முதலாம் திகதி தொடங்கிய இந்தயுத்தம் 1946 செப்ரெம்பர் இரண்டாம் திகதியன்று முடிவிற்குவந்தது

அமெரிக்கா, ரஷ்யா, இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நேசநாடுகள் ஒருபுறமும் ஜேர்மனி, யப்பான், இத்தாலி ஆகிய நட்பு நாடுகள் மறுபக்கமும் நின்று சமர்புரிந்த இந்தப்பயங்கரயுத்தம்வெறும் ஆதிக்க அரசியல் போர் மட்டுமல்ல ஜனநாயகத்திற்கும் பாசிசத்திற்கும் நடந்த போட்டிப் போருமாகும்.

இந்தப்போர் வரலாற்றிலேயே மிக மோசமான அழிவுகளை ஏற்படுத்தியது. இரண்டு கோடியே இருபது லட்சம் இராணுவத்தினரையும் இரண்டு கோடியே எழுபது லட்சம் பொதுமக்களையும் பலிகொண்ட மிகப் பெரும் யுத்தமாகும். இதில் ரஷ்யா மட்டும் இரண்டு கோடிஉயிர்களை இழந்தது. அமெரிக்கா 1945 ஆகஸ்ட் ஆறாம் திகதி யப்பான் நாட்டு ஹீரோசிம்மா நகரின்மீது வீசியஅணு குண்டினாலும் ஒன்பதாம் திகதி நாகசாகி நகரின்மீது வீசிய அணு குண்டினாலும் நாலுலட்சத்து நாற்பத்து மூவாயிரம் மக்கள் பலியாகினர். இந்த இரண்டாம் உலக யுத்தத்தில் மொத்தம் 41 லட்சத்து 40 ஆயிரம் கோடி ரூபா நட்டம் ஏற்பட்டது. இவ்வளவு அழிவுகளின் பின்னரும் போர்கள் நிற்கவில்லை. அரேபியா- இஸ்ரேல் போர்கள், கொரியா யுத்தம், வியட்நாம்போர், இந்தியா - சீனாயுத்தம், இந்தியா- பாகிஸ்தான் சண்டை, ஈரான் - ஈராக்போர், ஈராக்- குவைத் போர், தற்போது பொஸ்னியா - சேர்பியா போர், என்று உலகினை அழிவுப்பாதைக்கு கொண்டு சென்றன. உலகில் 62 நாடுளில் சுமார் பத்துக் கோடிநிலக் கண்ணிவெடிகள் எந்த நேரமும் வெடிக்கக் காத்திருக்கின்றன. கம்போடியாவில் மட்டும் அங்குள்ள மக்கள் தொகையைவிட அதிக கண்ணிவெடிகள் புதைக்கப் பட்டுள்ளன. உலகமெங்கும் இதுவரை கண்ணிவெடிகளால் மட்டும் பத்துலட்சம் பேர்பலியாகியிருக்கின்றனர்.

போர்கள் உலகத்தை நாசம் செய்த போதெல்லாம் மீண்டும் போர் ஏற்படாமல் தடுக்க என்ன செய்வதென்று மக்கள் சிந்தித்தார்கள். அதன் விளைவாக முதல் உலக யுத்தத்திற்குப் பிறகு சர்வதேச சங்கம் நிறுவப்பட்டது. சில குறைபாடுகளால் அந்த சங்கம் இயங்க முடியாது போயிற்று. எனவே ராஜதந்திரிகள் இரண்டாவது உலகயுத்தம் நடந்து கொண்டிருந்தபோது சர்வதேச சங்கத்தைத் திருத்தி அமைக்கும் பணியில் இறங்கினர். 1943 இல் அமெரிக்கா, சோவியத்ரஷ்யா, இங்கிலாந்து ஆகிய நாடுகள் இதற்காக மாஸ்கோவில் ஓர் மகாநாடு நடத்தினர். சீனாவும் பின்பு இதில் சேர்ந்து கொண்டது.

1945 ஜூன் 26-ம் திகதி பிரான்ஸிஸ்கோவில் நடந்த மகாநாட்டில் 51 நாட்டுப் பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள் ஐக்கிய நாடுகள் சபை சாசனமும் சர்வதேச நீதிமன்றச் சட்டமும் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டன.

1945இல் 51 நாடுகளை உறுப் னர்களாகக் கொண்டு தொடங்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபை இன்று 184 நாடுகளை உறுப்பினர்களாகக்கொண்டபெரும்சக்தியாக வளர்ந்துவிட்டது. ஐக்கியநாடுகள் சபையில் ஆறு முக்கிய உறுப்புகளுண்டு அவை, பொதுச்சபை, பாதுகாப்புச் சபை, பொருளாதார மற்றும் சமூகசபை, அறங்காவலர்சபை சர்வதேச நீதிமன்றம், செயலாளர் காரியாலயம் ஆகியவையாகும். பொதுச் சபையானதுசாசனத்தின்எல்லைக்குட்பட்ட எந்த பிரச்சினை பற்றியும் ஆராய்ந்து முடிவு எடுக்க உரிமையுடையது. முக்கிய முடிவுகள் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையால் நிறைவேற்றப்படல் வேண்டும். பொதுச் சபைக் கூட்டத்திற்கு ஒவ்வொரு நாடும் ஐந்திற்கு மேற்படாத பிரதிநிதிகளை அனுப்பிவைக்கலாம். ஆனால் ஒவ்வொரு நாடும் ஒருவாக்கை மட்டுமே அளிக்க முடியும். பொதுச் சபை ஆண்டிற்கொருமுறை கூடும். தேவை ஏற்படின் சிறப்புக்கூட்டம் நடத்தப்படலாம்.

பாதுகாப்புத்துறை யானது பொதுச் சபையின் செயற்குழு

**தொகுப்பு : சசிகரன்**

வாகும். இதில் 15 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

இங்கிலாந்து, ரஷ்யா, அமெரிக்கா, பிரான்ஸ், சீனா ஆகிய ஐந்து நாடுகள் நிரந்தர உறுப்பினர்கள். ஆஸ்திரியா, பெல்ஜியம், ஈக்குவடோர், இந்தியா, ஹங்கேரி, ஜப்பான், மொறொக்கோ கேப் வேர்டே, ஸிம்பாப்வே, வெனிசுவேலா ஆகிய பத்து நாடுகளும் நிரந்தரமற்ற உறுப்பினர்கள். இந்த உறுப்பினர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பொதுச்சபை மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

நிரந்தர உறுப்பு நாடுகளுக்கு ''வீற்றோ'' அதிகாரம் அதாவது ரத்து அதிகாரம் உள்ளது. அதன் மூலம் எந்தத் தீர்மானத்தையும் ரத்துச் செய்துவிட முடியும். இந்தச்சபை சர்வதேச அமைதியையும் பாதுகாப்பையும் பராமரிப்பதை முக்கிய பணியாகக் கொண்டுள்ளது.

அமைதி வழிக்கு ஒத்துவராமல் வலுச்சண்டைக்குச் செல்லும்நாட்டின்மீது வாணிபம், பொருளாதார மற்றும் போக்குவரத்துத் தடைகளை விதிப்பதுடன் படையை அனுப்பும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும். பொருளாதார சமூக சபையானது சர்வதேச பொருளாதாரம், சமுதாய பண்பாடு, கல்வி, சுகாதார விடயங்களை ஆய்வு செய்து பரிந்துரைக்கின்றது. அறங்காவலர் சபையானது முதல் உலகப் போரிலும், இரண்டாவது உலகப் போரிலும் தோல்வியடைந்த நாடுகளிலிருந்து பிரிக்கப்பட்ட பகுதிகளை நிர்வகித்து வருகிறது

சர்வதேச நீதிமன்றத்தில் நாடுகள் தமக்குள்ள பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளலாம். பொதுச்சபை, பாதுகாப்புச்சபை மற்றும் அமைப்புகளுக்கு சட்ட ஆலோசனைகளையும் இது வழங்கி வருகின்றது.

செயலகத்தின் தலைவர் பொதுச்செயலாளராவார். தற்போது எகிப்து நாட்டைச்

(7ஆம் பக்கம் பார்க்க)

## சிறுகதை

# செவ்வாயின் விருந்தினர்கள்

செவ்வாய் மண்டலத்தின் ஆய்வு கூடமொன்று வெற்றிக்களிப்பில் மிதந்தது.

''பேராசிரியர் மித்திரா உங்களை எப்படிப் பாராட்டுவதென்றே தெரியவில்லை. உங்கள் கண்டுபிடிப்பு மிக அற்புதம்'' தலைமை விஞ்ஞானி மித்திராவை பாராட்டினார்.

''உங்கள் ஆதரவுதான் எனதுவெற்றிக்குக் காரணம். எமது சக விஞ்ஞானி மகேஸ் மண்டைதீவிலிருந்து அந்த இரண்டு என்பு திசுக்களைக் கொண்டுவந்ததுதான் எனது முயற்சிக்கு வித்திட்டது தலைவரே''

''இருந்தாலும் கண்ணிவெடியில் சிதறிய உடம்பின் இரு திசுக்களை வைத்து இறந்த இருவரை மீண்டும் உருவாக்கியிருப்பது எமது கிரக மண்டல விஞ்ஞான கூடத்தின் மிகப்பெரிய சாதனை மித்திரா. இதற்காக எமது செவ்வாய் மண்டலம் உமக்குக் கடமைப்பட்டுள்ளது. உங்கள் அடுத்த நடவடிக்கை''

''தலைவரே அவர்களிருவரையும் மீண்டும் பூமிக்கு அனுப்பப்போகின்றேன். அதுவும் அவர்கள் வாழ்ந்த யுத்த பூமிக்கே அனுப்புவது நல்லது என நினைக்கின்றேன்.''

''அனுப்பி..... ''இழுத்தார் தலைவர்.

''அவர்களது உணர்வுகளை இங்கே கம்பியூட்டரில் பதியப் போகின்றேன். மீண்டும் உருவாக்கப்பட்ட அவர்களின் உணர்வுகளும் அவர்களைப் போல் இருக்கின்றதா என அறிவது நல்லதல்லவா''

''அற்புதமான யோசனை. அப்படியே செய் மித்திரா'' தலைவர் மிக மகிழ்வுடன் அனுமதியளித்தார்.

''கொப்பே, விமலரட்ணா வாருங்கள் உங்கள் இருவரையும் நாம் இன்று ஈழத்திற்கு மீண்டும் அனுப்பப் போகின்றோம். மகிழ்ச்சிதானே''

''ஐயையோ மீண்டும் ஈழத்திற்கா'' - பதறினார் கொப்பே. ''எதற்காக பயப்படுகிறாய் கொப்பே''

''மித்திரா அவர்களே மக்கள் எம்மை அடையாளம் கண்டுவிட்டால்...''

''பயப்படாதே ஜெனரல் சாதாரண மானிடர் கண்களுக்கு நீங்கள் தெரிய மாட்டீர்கள் குரல்மட்டுமே கேட்கும்''

''அப்படியா மிக்க நன்றி மித்திரா அவர்களே. நாம் இன்றே புறப்படுகின்றோம்'' இருவரும் ஆயத்தமாகினர்.

நள்ளிரவை அண்மித்த நேரம் பறக்கும் தட்டில்...

''விமல் நாம் எமது கட்டுப்பாட்டிலுள்ள நாகதேவன் துறையில் தரை இறங்குவது நல்லதென நினைக்கின்றேன்''

''ஆம் ஜெனரல் அது நமக்கு பாதுகாப்பு''

''விமானி அதோ தெரியும் துறையில் எம்மை இறக்கிவிடு''

கொப்பே உத்தரவிட

கடற்கரை ஓரமாக அமைதியாக தரையிறங்கிய பறக்கும் தட்டு இருவரையும் இறக்கிவிட்டு விண்ணில் மறைந்தது.

''என்ன ஜெனரல் ஒரே இருட்டாக இருக்கின்றது''

''அதுதான் விமல் நானும் யோசிக்கின்றேன். எமது பட்டாலியன் எதையும் காணவில்லை''

''சில வேளை முகாமை மூடிப்போட்டாங்களோ தெரியவில்லை''

''இருக்க முடியாது விமல்! முற்றுகைக்கு முக்கியமான முகாமிது அதுமட்டுமல்ல தமிழரை வெட்டி கொல்வதற்கும் இந்த முகாம் பயன்படும். அதால மூடமாட்டாங்கள். எதற்கும் சிறிது தூரம் நடந்து பார்ப்போம்''

நீண்ட தூரம் நடந்து சங்குப்பிட்டி துறைக்கு வந்தனர் இருவரும். அங்கும் இராணுவத்தை காணாது திகைத்தனர். பின்னர் யோசித்தவாறு தெற்குப் பக்கமாக சில மைல்கள் நடந்தனர். முன்னணிக் காவலரண்கள் சிலவற்றைக் கண்டுஉள்ளே நுழைந்தனர். இக்காவலரண்களின் தளபதி அப்புகாமி அரைத் தூக்கத்திலிருந்தான். அருகில் சென்ற கொப்பேகடுவ,

''அப்பு - அப்பு' '- என மெல்லக் கூப்பிட்டார்.

திடுக்கிட்டு விழித்த அப்புகாமி,

''சூட் - சூட் பூந்திட்டான்எல்.ரீ.ரீ ''என பயங்கரமாகக் கத்தினான்.

தொடர்ந்து

துப்பாக்கி ரவைகளும் ஆட்லறி செல்களும் நாலாபக்கங்களிலும் பறந்தன.

தலையில் அடித்துக்கொண்டார் கொப்பே,

''இப்படிப்பட்ட மடையன்களை வைத்துக் கொண்டு சுதந்திர உணர்வுகளை அடக்க நினைக்கிற எங்கட ஆட்களை நினைக்க கவலையாக இருக்கு விமல்''

''ஏன் இவங்க பின் வாங்கி இருக்கிறாங்க ஜெனரல்''

''அப்புகாமி- தளபதி சிறிசேனாவின் குரல் இருவரின் பேச்சையும் நிறுத்தியது.

''அப்பு! எங்கே புலியைப் பார்த்தாய்''

''என்னை அருகிலிருந்து அழைத்தது போல இருந்தது அதோட காலடி ஓசையும் கேட்டது. அதுதான் உசாராகிட்டன் சார்'

'மடையா, இல்லாததற்கு உசாராகிவிட்டாய் ஆனால் நாகதேவன் துறையை அவங்க அழிச்ச போது விழுந்தடித்து ஓடி வந்துவிட்டாய். கவனமாக இரு'

திட்டியவாறு தளபதி சிறிசேனா நகர்ந்தான்.

கொப்பேயும் விமலும் அதிர்ந்தனர். 'என்ன நாகதேவன் துறை அழிக்கப்பட்டுவிட்டதா

திகைப்புடன் வெளியேறிய இருவரும் சிறிதுதூரம் நடந்து கடற்கரையை அடைந்தனர்.

அங்கு ஒரு படகு மெதுவாக ஊர்ந்தபடி சென்றது.

'விமல் ஓடிவா எமது வீரர்கள் நீருந்துப்படகில எங்கோ புறப்படுகிறார்கள். வா ஏறுவோம்-' என்றபடி ஓடிய கொப்பே படகில் ஏறினார்.

அவரைத் தொடர்ந்து ஏறிய விமலும் ஓரமாக அமர்ந்தான்.

சிறிதும் சலனமின்றி ஊர்ந்த படகு சிறிது தூரம் சென்றதும் 'குணா இனி பயமில்லை. இயந்திரத்தை இயக்கி வேகமாகப் போ' திடுக்கிட்டனர் இருவரும்.

மெதுவாக விமலின் காதில் குசுகுசுத்தார் கொப்பே 'இது புலிகளின்ர படகு. முகாமுக்கு அருகிலிருந்து வருகிறாங்கள். எங்கட மடையர்கள் தூங்கி வழியுறாங்க'

'ஜெனரல் நாம் குதித்து போய் அவர்களை எச்சரிப்போமோ'

'முட்டாள் பேசாமல் வா'

விரைந்து வந்த படகு கரை தட்டியது.

மெதுவாக இறங்கி கரையை அடைந்த கொப்பே விமல் இவங்க கடல்புலிகள் போல இருக்கு' என்றார்.

'என்ன புலி நேவியா. நோ இவங்களிடம் விசைப்படகு எப்படி வந்தது என விமல் கேட்கவும் அந்தப்பாடல் அவன் செவியை தாக்கியது.

நாகதேவன்துறை வேகப்படகுகள் காலில் விழுந்ததடா...

'என்ன நாகதேவன்துறை படகுகளை எல்லாம் பறிச்சிட்டாங்களா.' திகைப்புடன் கேட்டான் விமலரட்ணா.

'இதில திகைக்கிறதிற்கு என்ன இருக்கு. குரலைக் கேட்டே பயப்படுறாங்க எங்கட ஆட்கள். இவங்க பயப்படாம அவங்கட முகாமுக்கு போய் வாறாங்க. இருவருக்கும் வித்தியாசத்தை பார்த்தாயா'

'நீங்க இருந்தா இப்படி நடக்க விட்டிருக்க மாட்டீங்க ஜெனரல்'.

'நான் மட்டுமல்ல யார் இருந்தாலும் இது நடந்திருக்கும். மண்ணுக்காக போராடுறவங்க வேகத்துக்கு முன்னால் பணத்துக்காக வாறவங்க எப்படி எதிர்த்து நிக்க முடியும். கடைசில எல்லோருக்கும் நம்ம கெதிதான்.''

'உண்மைதான் ஜெனரல் கூறிவிட்டு திரும்பிய விமல் 'அதோ ஒரு வாகனம் நிற்கிறது. வாருங்கள் ஜெனரல்'

இருவரும் மக்கள் நிறைந்த அந்த வாகனத்தில் ஏறினார்கள். வாகனத்தின் யன்னலினூடாகத் தெரிந்த கடற்பரப்பில் சீறிச் சென்றது படகொன்று.

'அங்க பாத்தியளே கடற்புலியளிட படகு போகுது. ஆனையிறவு சண்டை முடிஞ்சப்போ தலைவர் சொன்னாராம் கடற்படை ஒண்டைக் கட்டி எழுப்ப வேணுமெண்டு இண்டைக்கு எங்கட கடல் முழுவதும் எங்கட கட்டுப்பாட்டில இருக்கு. இனி ஒருத்தரும் இஞ்ச வாலாட்டேலாது.'

பெண்ணொருத்தி பெருமிதத்தோடு கணவனுக்கு கூறியதைக் கேட்ட இரு தளபதிகளும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

விரைந்து சென்ற வாகனம் மேஜர் பிரதாப் செட்டி பண்ணைக்கு சற்று தள்ளி நின்றது. மக்களுடன் மக்களாக இருவரும் இறங்கினர்.

'ஜெனரல் அதோ அங்க மிக வெளிச்சமாக இருக்கு. சனங்களும் நெரிசலாக இருக்கு. ஏதோ ஆலயம் போல இருக்கு, வாருங்கள் போய் பார்க்கலாம்' என்றபடி சென்ற விமலரட்ணாவைத் தொடர்ந்துசென்ற கொப்பே கண்ணில் பட்ட பெயர்ப்பலகையைக் கண்டு திகைத்தார் - மாவீரர் துயிலும் இல்லம் -

'உடல்களைப் புதைக்கும் இடத்தையா இந்த இருளில மக்கள் வணங்கிச் செல்கின்றனர். இதென்ன தமிழர்களுக்குப் புத்தி கெட்டுப் போச்சா விமல்...' சிறிது உரக்கக் கேட்டார் கொப்பே.

'ஆரடா அவன் தமிழருக்குப் புத்தி சொல்ல வந்திட்டான், இது வெறும் உடல்களைப் புதைக்கிற இடமாடா'

அருகில் நின்றவ யோதிபர் கொதித்தார்.

திடுக்கிட்ட கொப்பே,

'ஐயா எங்களை யார் எண்டு தெரிகிறதா' என்றார்.

''இல்லையடா தம்பி எனக்கு கண் கொஞ்சம் மங்கிப் போச்சு. உங்கட குரல்தான் காதில கேட்டுது. ஆரடா தம்பி நீ''

',நாங்கள் வெளிநாட்டுக் காரங்க ஐயா''

''அதுதானே இந்த இடத்தின்ர புனிதம் தெரியாம நிக்கிறியள்''

''என்னப்பு புனிதம்''

''தம்பிமார் இது என்ன இடம் தெரியுமே. தமிழற்ற விடிவுக்காக தங்கட உசிரைக் கொடுத்த தெய்வங்களோட வித்துடல்கள் தூங்கிற இடமப்பா இது. சின்ன வயசில எல்லாத்தையும் துறந்து தமிழீழம் எண்டுற புனித இலச்சியத்துக்காக தங்களை அர்ப்பணிச்ச புனிதர்களின்ர கோயிலப்பா இது''

''வீதியெல்லாம் தோரணங்கள் கட்டப்பட்டிருக்கு- - -''

''ஓம் தம்பியவை. மாவீரரின்ர தியாகத்தைக் கௌரவிச்சு சனங்கள் கொடுக்கிற மரியாதையப்பா இது. வீடு வீடாக தீபம் கொளுத்தி மாவீரர் நாளில் இந்த தெய்வங்களுக்கு அஞ்சலி செய்வாங்க தம்பி''

''ஓ! மாவீரர் நாளில மட்டும் அவங்களை நினைப்பீர்களா'' என்றான் விமல்.

''முட்டாள் பயலே - நாங்கள் ஏனடா அவங்களை நினைக்கப்போறம்''

''வாட், நினைப்பதில்லையா'' வியப்புடன் கேட்டார் கொப்பே.

''மறந்தா தானே தம்பியள் நினைக்கிறதுக்கு எங்கட மனங்களில தினமும் இருங்கிறாங்கப்பா''

''பிறகேன் மாவீரர் நாள் கொண்டாடுறீங்க''

''தம்பிமார் நாங்கள் கடவுளைத் தினமும் நினைக்கிறம் - ஆனால் அவர்களுக்கு சில நாள் திருவிழா கொண்டாடேல்லயா. அதுபோலத்தான் மக்களின்உணர்வுகளை முழுமையா அவங்களுக்கு ஒப்படைக்கத்தான் இந்த நாளை நாம கொண்டாடுறம்'' - பெரியவர் விளக்கமளித்தார். அந்த நேரம் பாண்ட் இசை கேட்டது.

''தம்பிமார் ஓரமா நில்லுங்கோ எங்கட படை அணிகள் வருகுது''

''படையணியா -திகைத்து திரும்பிய இருவரும் நீண்ட அணிகள்வருவதைகண்டனர்.

முன்னுக்கு எங்கட தேசிய கீத இசைக்குழு வரும், அடுத்து காவல் படையணி பிறகு இராணுவ அணி, அதிரடி அணி, மகளிர் அணி, கடைசியில கடற்புலிகள் நீல உடுப்போட வருவினம்'' வயோதிபர் அடுக்கிக் கொண்டே போனார்.

''என்ன இவ்வளவு படையணிகள் உருவாகியுள்ளனா'' கொப்பே கேட்டார்.

''இவை மட்டுமல்ல மக்கள் படையணியும் பின்னால திரண்டிருக்கு''-வாய் பிளந்து நின்றனர் இரு தளபதிகளும்.

''ஓகோ இதுதான் இவர்கள் இவ்வளவு வெற்றிகளை குவிக்கிறாங்களா''

''இவ்வளவு கௌரவம் கொடுத்தா எல்லாருக்கும் போராட மனம் வருந்தானே ஜெனரல்''

''முட்டாளே. புகழுக்கும் பதவிக்குமாக எங்கட பிள்ளைகள் உசிரைக் கொடுக்கேல்ல. எல்லாம் மண் பற்று எங்கட கரும்புலியளை எடுத்துப் பாரன். இண்டைக்கு உலகத்திலேயே கதைக்கப்படுகிறது கரும்புலிகளின்ர தியாகம் தம்பிமார். வெடிமருந்து

(6ஆம் பக்கம் பார்க்க)

பா. மனோகரதாஸ்

## அ. கி. ஏரம்பமூர்த்தியின் 'உதய கீதங்கள்'

தருணமிது தருணமிது'

காத்திரமுள்ள கவிதை வரிகள் இவை. தமிழன் தூங்கிக் கிடப்பதையும், அஞ்சி ஒளிப்பதையும் ஆசிரியர் வெறுப்புடன் பார்க்கின்றார். வேங் கைகளோடு இணைந்து 'போ

## யுத்தக் களங்களில் மருத்துவர்களின் பங்களிப்பு

அமெரிக்கப்புரட்சியின்

புளோரன்ஸ் நைற்றிங்கேல்

வர்களுக்கெல்லாம் எவ்வாறு

கருதப்படுவார்கள் என்கிற

# உதய கீதங்கள்

## (கவிதை நூல்)

## ஒரு பார்வை !

'போர் முரசே நீ
கொட்டு உடன்
புறப்படு எதிரியை முட்டு
சேர் தமிழீழம் விட்டு வே
றெதையும் விரும்பிடோம்
சொட்டு'

இந்த தேசம்தான் இந்த நெருப்பு வரிகளுக்கு என்றும் உறவுடையது என்று சொல்ல வேண்டும்.

இந்த வரிகளுக்குள் ஆழப் பொதிந்துள்ள உட்பொருள் இந்த மண்ணின் விடுதலையை விரும்பி நிற்கின்றது.

அடக்கப்பட்டுள்ள இனத்தின் எழுச்சியிலேயே அதன் சுதந்திரத்தின் வேர் முளைவிடும் என்பதே இந்த வரிகள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

அ. கி. ஏரம்பமூர்த்தி எழுதிய 'உதய கீதங்கள்' என்ற கவிதை நூல் முழுக்க முழுக்க இந்த மண்ணின் சமகால இயல்பு நிகழ்வுகளைப் பதிவு செய்துள்ளது.

போராட்டம், தியாகம், சுதந்திர தாகம் போன்ற போராட்டத்தின் பரிணாமங்களை அழகாக சுட்டி நிற்கின்றன.

'ஒரு மொழியின் வரலாற்று வழித் தடத்தில் புதிது புதிதாக உருவாகும் கலை, இலக்கியங்களின் சீரையும், செழுமையையும் வைத்தே அந்த இனத்தின் வளத்தையும் நலத்தையும் அறிந்து கொள்ள முடியும். ஈழத் தமிழினம் இந்த நாட்டில் நீண்ட வரலாற்றைக் கொண்டது. தமிழீழத்தைத் தன் தாயகமாகக் கொண்டு இங்கு தான் ஆட்சியை நிலைநிறுத்த உரிமையுடையது என்பதைத் தன் பாட்டு மூலம் முரசறைகின்றார் எமது மதிப்பிற்குரிய தமிழிசைவாணர் அ. கி. ஏரம்பமூர்த்தி அவர்கள்' என்று விடுதலைப் புலிகள் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் இந்த நூலிற்கு வழங்கிய பாராட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

இவரது பல கவிதைகளில் தமிழ் இனத்தின் வளம் சொல்லப்பட்டுள்ளது. இது மட்டுமல்ல இந்த இனத்தின் தேவைகளையும், அவலத்தையும் ஆசிரியர் சித்திரித்துள்ளார்.

**அடக்கப்பட்டுள்ள இனத்தின் எழுச்சியிலேயே அதன் சுதந்திரத்தின் வேர் முளைவிடும் என்பதையே இந்த வரிகள் வெளிப்படுத்திநிற்கின்றன.**

**இந்த கவிதைகளில் மிக முக்கியமாகச் சொல்ல வேண்டியது. ஒவ்வொரு வார்த்தைகளுக்குள்ளும் தேங்கியிருக்கும் நேர்மை.. துணிவு.-**

**- வவுனியா திலீபன்**

'தூங்கிக் கிடந்தது
போதுமடா
ஏங்கி ஒளித்ததும் போதுமடா
வேங்கைகளோடு
இணைந்திடடா
ஓங்கிடும் வெற்றியைக்
கண்டிடடா
தமிழ்மகனே தமிழ்மகனே

...பதையும் ஆசிரியர் வெறுப்புடன் பார்க்கின்றார். வேங்கைகளோடு இணைந்து 'போராடப் போடா' என அவர் ஆணையிடுகின்றார். வெற்றி பெற இது தான் தருணம் எனச் செப்புகின்றார்.

நாம் செய்து கொண்டிருப்பதையும், இனிச்செய்ய வேண்டியதையும் எந்த வித வார்த்தை அலங்கரிப்பும் செய்யாமல் நேரடியாகச் சொல்கின்றார்.

இந்தக் கவிதைகளில் மிக முக்கியமாகச் சொல்ல வேண்டியது ஒவ்வொரு வார்த்தைகளுக்குள்ளும் தேங்கியிருக்கும் நேர்மை... துணிவு.

'அச்சு முறிந்து ரயர்வெடித்து
பச்சை விறகு றோட்டில்
சிதற
உச்சிவெயில் காய்கின்றார்
கள் பார்...
- என் கண்ணம்மா
உள்ளம் மிகவும் நெகிழுதடி'

இது இந்த தேசத்தின் நிகழ்வு... நாம் தினம் தினம் பார்க்கும் சம்பவம்... விறகு சுமக்கும் தொழிலாளியின் அவலம்... இதைக் கவிதை வரிகளுக்குள் கவிஞர் கோர்த்து சமூகத்தின் மீது விசாரணையை மேற்கொள்கின்றார்.

அவர் மனம் நெகிழும் அளவிற்கு வீதிக் காட்சி அவர் நெஞ்சை பிழிய வைக்கின்றது.

இந்தமண்ணின் அழிவுகள்... அவலங்கள்... அழுகைகள்... எல்லாவற்றையும் கவிஞர் கவிதைகளுக்குள் அடக்கி வைத்துள்ளார்.

'வார்த்தைகளுக்குள் 'சுதந்திரத் தீ' வளர்த்து பாட்டுக்கள் கட்டும் பாவலன்' என கவிஞர் புதுவை இரத்தினதுரை குறிப்பிட்டிருப்பது எந்தளவு யதார்த்தம் என்பது கவிஞரின் வரிகள் ஒவ்வொன்றையும் ஆர்வத்துடன் பிய்த்து ஆராயும்போது தான் புலப்படுகின்றது.

ஒடுக்கப்படும் இனம் சார்பாக குரல் கொடுப்பதற்காக காலம் இந்த மண்ணிற்கு பல கலைஞர்களை, கவிஞர்களை தந்துள்ளது. இந்த வகையில் இந்த நூலாசிரியரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

---

### அமெரிக்கப்புரட்சியின் போது

அமெரிக்கப்புரட்சி நடைபெற்றபோது களத்தில் சண்டையில் இறந்தவர்களைவிட (Forge Valley) போர்ஜ் பள்ளத்தாக்கில் எதிர்கொண்ட கடினத்தைவிட, வயிற்றோட்டத்தினாலும், புள்ளிக் காய்ச்சலினாலும், நியூமோனியாக் காய்ச்சலினாலும், மலேரியாவினாலும் இறந்தவர்களின் எண்ணிக்கை மிக அதிகமாகும்.

பதினெட்டாம் நூற்றாண்டில் போர்முறை பற்றிய மருத்துவம் (Medicine of Warfare) படிப்படியாக இராணுவ அமைப்பின் முழுக்கட்டுப்பாட்டிற்குள் வந்தது. இதன்போதே இராணுவ மருத்துவமனைகள், அன்புலன்ஸ் நிலையங்கள், இராணுவக்கல்லூரிகள் மற்றும் விசேடமான மருத்துவ சஞ்சிகை (1766) என்பன தோற்றம் பெற்றன. நெப்போலியனது போர்க் களங்களில் முதல் 15 வருடங்களில் பிரான்ஸ் நாட்டிற்கும்அதனுடைய நட்பு நாடுகளுக்கும் ஏற்பட்ட மனித இழப்பு அறுபது இலட்சமாகும். நாட்டினுடைய மனித வளத்திற்கு ஏற்பட்ட இழப்பிலிருந்து இன்றுவரையில் நாடுகள் மீளவில்லை என்கிறார்கள் ஆய்வாளர்கள் கிரைமியன் போர்தான் சிவில் நிர்வாகக் கட்டமைப்பிலிருந்து விடுபட்டு தனியான சுதந்திரமான இராணுவ சுகாதார அமைப்பில் உருவாக வழி வகுத்தது. இந்தச் சண்டையின்போது திறமையான தாதிகளின் பராமரிப்பு இல்லாததினால் நேசநாட்டுப் படைகளுக்கு குறிப்பாக பிரிட்டிஷ் இராணுவத்திற்கு பேரிழப்பு ஏற்பட்டது. இதனால் இந்தப்பின்னடைவை விசாரிப்பதற்காக விசேடமாக விசாரணைக்குழுவே அமைக்க வேண்டிய நிர்ப்பந்தம் பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்கு ஏற்பட்டது இதன் பின்னரேயே பிரபல்யமான புளோரன்ஸ் நைற்றிங்கேல் (Florence Nightingale என்பவர் நவீன தாதி பராமரிப்பு முறைக்கு வழி சமைத்தார்.

### மயக்க மருந்துகள் (Anaesthetics)

பதினெட்டாம் நூற்றாண்டில் நடைபெற்ற உள்நாட்டுப் போரிலேயே முதன் முதலாக மயக்க மருந்துகள் (Anaesthetics )பயன் பாட்டுக்கு வந்தன. ஆனாலும் அப்போது போதியளவு மயக்க மருந்துகள் கிடைக்கவில்லை. களத்தில் நேரடியாக இறந்தவர்களின் எண்ணிக்கையை விட காயங்களின் பின்னர் கிருமிகள் தொற்றி (Sepsis)இரத்தப்பெருக்கு வயிற்றோட்டம் என்பன ஏற்பட்டன. முகாம்களில் ஏற்பட்ட சுகாதாரச் சீர்கேடுகளும் தொற்றுநோய்களினாலும் பல இராணுவ வீரர்கள் இறந்தனர். பலர் அங்கவீனமாயினர். 44,800 இராணுவ வீரர் களத்தில் சண்டையில் நேரிடையாக இறந்தார்கள். 32 000 பேர் காயங்களினால் பின்னர் புண்கள் ஏற்பட்டு இறந்தார்கள். ஏறக்குறைய 186,000 பேர் அதாவது ஒவ்வொரு ஆயிரம் பேரிலும் 61 பேர் நோயினால் இறந்தார்கள். ஜே,ஜே. வூட்லட் அவர்கள் ''புரட்சியாளர்களின் போரும் மருத்துவ சத்திர சிகிச்சையின் வரலாறும்'' என ஆறு தொகுதிகளில் இது பற்றி எழுதியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து நடந்த ஸ்பானிய அமெரிக்க யுத்தத்தின் போது (Spanish-American war) கூட களத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கையை விட நெருப்புக்காய்ச்சலினால் (Typhoid Fever) இறந்தவர்களின் எண்ணிக்கை அதிகமாகும்.

எதிர்காலத்தில் நடைபெறக்கூடிய போர்க்கலவரம், யுத்தம்என்பவற்றின் போதெல்லாம் களத்தில் காயப்படுபவர்களுக்கெல்லாம் எவ்வாறு சிகிச்சை அளிக்கப்படல் வேண்டும், களத்தில் காயப்பட்டவர்களை எவ்வாறு உடன் அகற்ற வேண்டும், முதலுதவி சிகிச்சை அளிக்கப்படல் வேண்டும், காப்பாற்றப்படல் வேண்டும் என்கின்ற எண்ணங்களின் அடிப்படையிலேயே செஞ்சிலுவைச்சங்கம் உருவகம் பெற்றது

### சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்-I.C.R C.(International Committee of the Red Cross)

1859இல் இத்தாலியில் ரைசோகிரிமண்சோ (Italian Risogrimento) என்ற இடத்தில் சொல்பெரினோ யுத்தம் (Battle of Solferino) நடைபெற்றது. தமது வியாபாரப்பண்ணையை நிர்வகிப்பதற்காக அங்கு தங்கியிருந்த சுவிற்சிலாந்து நாட்டுப் பிரஜை கென்றி டுனன்ற் (Henry Dunant 1828-1910) இந்தச்சண்டையை நேரில் அவதானித்ததோடு களத்தில் காயப்பட்ட போர்வீரர்களுக்கும், அதன் பின்னரும் முதலுதவி மருத்துவ வசதிகள் இன்றி அவதிப்பட்டதையும் பலர் வீணாக மடிந்ததையும் நேரில் கண்டார். இந்த சம்பவங்களைத் தொகுத்து மிகவும் பிரபல்யம் வாய்ந்ததும் செல்வாக்கையும் ஏற்படுத்தியதுமான சொவெனிர் டி ஸொல்பெரினோ (Souvenir de Solferino) என்கிற நூலை எழுதினார். இதுவே 1836இல் ஜெனிவாவில் சர்வதேச மாநாடு ஒன்றிற்கு வழி வகுத்தது. பின்னர் 1864இல் ஜெனிவா பிரகடனத்திற்கும் (Geneva Convention) ஏதுவாகியது. இதில் முதலில் 14 நாடுகள் போரின் போது களத்தில் காயப்படும் வீரர்களுக்குத் தேவையான சிகிச்சை அளிப்பதில் ஈடுபடுபவர்களும் நடுநிலை வகிப்பவர்கள் எனக் கருதப்படுவார்கள் என்கிற பிரகடனத்தில் கைச்சாத்திட்டார்கள். இதன் போதே சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் தோற்றுவிக்கப்பட்டது.

**டாக்டர் எஸ். பி. ஆர். சீர்மாறன்**

### களத்தில் மருத்துவர்கள் (Doctors in the Field)

பிரெஞ்ச - புருஸ்ஸியன் (France Prussian) சண்டையின் போது மருத்துவப்பிரிவு மிகத் திருப்திகரமாகச் செயற்பட்டது. புருஸ்ஸியன் இராணுவத்தில் 4,000 மருத்துவர்களும் பிரான்ஸ் நாட்டு இராணுவத்தில் ஆயிரம் மருத்துவர்களும் கடமை புரிந்தார்கள்' காயப்பட்டவர்கள் விரைவாகவும் நல்ல முறையிலும் கவனிக்கப்பட்டார்கள் இதனால் தொற்று நோய்களும் புண்களும் ஏற்பட்டது மிகக்குறைவாகவே இருந்தது. மேலும் சண்டையில் ஈடுபடுத்தப்பட்ட ஜேர்மனிய இராணுவத்தினருக்கு அன்று நிலவிய 'சின்னம்மை' .(SmallPox) தொற்று நோய்களுக்கெதிராக அடிக்கடி தடுப்பூசி போடப்பட்டதனால் அவர்களில் 483 பேருக்கு மட்டுமே சின்னம்மை நோய் ஏற்பட்டது. ஆனால் தடுப்பூசி போட்டுக்கொள்ளாத பிரெஞ் இராணுவத்தினரில் 4,178 பேருக்கு நோய் ஏற்பட்டது. இதில் 2,000 பேர் இறந்துவிட்டார்கள்.

### முதல் இராணுவ மருத்துவ மனை (First Military Hospital)

இத்தாலிய இராணுவத்தின் மருத்துவப்பிரிவு 'பொடிமென்ற் ஸ்தாபனம்' (Pedimont) ஆதிகால சரித்திரத்தைக்கொண்டது. 1637 - 1648- ல் மரியா சிறிஸ்டினா காலப்பகுதியில் சுகாதாரப் பிரிவு தொடங்கியது. டியூரின் பிரதேசத்தில் வில்லாரியேல் (VillaReale in Turin) என்கிற இடத்தில் 'ஒஸ்பொடலி வொலண்டி' (Ospedal Volanti) என்கிற நிரந்தரமான இராணுவ மருத்துவ மனை ஆரம்பிக்கப்பட்டது. இதுவே

(6 ஆம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணம்



# ஐ.தே.க தலைவர் ரணிலுக்கு தொடரும் நெருக்கடி மழைவிட்டும் தூவானம் நிற்காத நிலை

ஐக்கிய தேசியக் கட்சியில் மீண்டும் குத்து வெட்டுக்களும் குழிபறிப்புகளும் மேடையேறத் தொடங்கிவிட்டன. காமினி திசாநாயக்காவின் மரணமும் அதனைத் தொடர்ந்து கட்சிக்குள் முன்னிலைப் படுத்தப்பட்ட சிறிமா திசாநாயக்கா ஜனாதிபதி தேர்தலில் கண்ட தோல்வியும் ரணில் விக்கிரமசிங்காவுக்கு தலைமைத்துவத்தை தந்தாலும் அவருக்கிருக்கும் எதிர்ப்புக்கள் இன்னும் குறைந்ததாகத் தெரியவில்லை.

மறைந்த முன்னாள் கட்சித் தலைவர்களான பிரேமதாசாவினதும், காமினி திசாநாயக்காவினதும் ஆதரவாளர்கள் ரணிலுக்கு எவ்விதத்திலும் தடைக்கல்லாகவே இருப்பதாக ஐ.தே.கவட்டாரங்கள் கூறுகின்றன. ரணில் சட்சியை கொண்டு நடத்த திறமையற்றவர் என்பதை நிரூபித்து அதன் மூலம் தங்களை வலுப்படுத்திக் கொள்ள இவர்கள் முயன்று வருவதாகவும் கூறப்படுகின்றது. இச் செயற்பாடுகளில் முன்னாள் சிரேஷ்ட அமைச்சர்கள் சிலரும் முனைப்பாக ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

கட்சிக்குள் தொடரும் நெருக்கடிகளில் இவ்வாறான நடவடிக்கைகள் ஐ.தே.கவை மேலும் மோசமான கட்டத்துக்கே கொண்டு செல்லலாம். படுதோல்வியடைந்த நிலையில் இருக்கும் ஐ.தே.கவை அடிமட்டத்திலிருந்து கட்டியெழுப்புவதற்கு ரணில் முயற்சிகளை மேற்கொள்வதாக கூறப்படும் இத்தருணத்தில் இந்நிலைமை கட்சியின் அத்திவாரத்தையேஅசைக்கக்கூடியதாக உள்ளது.

ஐ.தே.கவினுள் தனிப்பட்ட சில தலைவர்களால் தங்களுக்கென உருவாக்கிக் கொள்ளப்பட்ட கோஷ்டிகளும் கட்சித் தலைமையை ஏற்றவர்கள் கடைப்பிடித்த சுய ஆதாயக் கொள்கைகளுமே, உறுதியான தலைமை ஒன்றை ஐ.தே.க. பெறமுடியாமைக்குக் காரணம் என கூறப்படுகின்றது.

இப்படியான கட்டத்தில் கனவான் அரசியலை நடத்த ரணில் விக்கிரமசிங்கா தொடர்ந்து முனையும் பட்சத்



தில் அவருக்கேற்படக் கூடிய பாதகமான விளைவுகள் வெளிப்படையாகவே தெரிகின்றன. இதன் காரணமாக முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் ஆசியோடுதனக்கென ஆதரவுதளமொன்றை உருவாக்க ரணில் விக்கிரமசிங்கா ஆரம்பகட்ட முயற்சிகளை எடுத்திருப்பதை அறிய முடிகின்றது.

இவ்வாறு ''ரணில் அணி'' ஒன்று உருவாகும் பட்சத்தில் அவ்வணியில் இடம்பெற வைப்பதற்காக பல சிரேஷ்ட ஐ.தே.க. தலைவர்களை அணுகி சம்மதிக்க வைக்கும் முயற்சிகளில் ஜே.ஆர். ஜெயவர்த்தனா இறங்கியுள்ளமையும் கவனிக்கத்தக்கது.

இந்த முயற்சிகள் பூர்த்தியாகும் சமயத்தில் ஐ. தே. கவின் தேசிய மாநாடு கூட்டப்படுவது சாலப்பொருத்தமானதாகஇருக்கும் என ரணில் கருதுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளதுஇதற்காக தேசியமாநாட்டுக்கான ஒன்றுகூடல் திகதி நாளையிலிருந்து எதிர்வரும் 17ந்திகதிக்கு பின்போடவும் பட்டுள்ளது.

கட்சியின் தேசிய மாநாடு ஒத்திவைக்கப்பட்டமைக்கு காமினி திசாநாயக்கா மற்றும் பிரேமதாசா அணிகளைச் சேர்ந்த சுசில் முனசிங்கா, விஜேபால மென்டிஸ், எம். எச் முகமட், அனுரா பண்டாரநாயக்கா, சரத் அமுனுகம ஆகியோர் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். தேசிய மாநாட்டுக்காக உறுப்பினர்களை அழைக்கும் நடைமுறையிலும்கட்சித் தலைமையகம் சிறிகோத்தா செய்த மாறுதல்களும் இவர்களின் எதிர்ப்புக்கு இலக்காகியுள்ளது.

கட்சித் தேசிய மாநாட்டுக்கு குறித்த பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரே தனது தொகுதி உறுப்பினர்களை அழைத்து வரும் நிலை மாற்றப்பட்டு இம்முறை சிறிகோத்தாவிலிருந்து ஒவ்வொரு தேர்தல் தொகுதியையும் சேர்ந்த முந்நூறு உறுப்பினர்களுக்கு நேரடியாக அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சிறிகோத்தா அழைப்பிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பட்டியல் ரணில் ஆதரவாளர்களால் நிரப்பப்பட்டுள்ளதாக இதற்கு ஆட்சேபம் எழுப்பப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்திலுள்ள ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் காமினி திசாநாயக்காவிற்கு சார்பானவர்கள் என்ற நிலையில் தேசிய மகாநாட்டில் இவர்கள் அழைத்துவரும் உறுப்பினர்களால் தனக்கேற்படக்கூடிய இடையூறுகளை களையவே ரணில் முற்றிலும் மாறான புதிய அழைப்பு நடைமுறையைக் கடைப்பிடித்ததாகக் கூறப்படுகின்றது

சிறிகோத்தாவில் வைத்து பத்திரிகையாளர் ஒருவர் இது தொடர்பாக கேள்வியெழுப்பிய போது, கட்சியில் இறுதி முடிவு எடுக்கும் அதிகாரம் தன்னிடம் இருப்பதாகவும்-அதற்கமையவே இத்தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும். ரணில் விக்கிரமசிங்கா பதிலளித்ததானது இதனை வெளிப்படையாகவே காட்டியுள்ளது.

தனது வழமையான கனவான் அரசியலை கைவிட்டு ராஜதந்திர நடவடிக்கைகளில் ரணில் கால் பதித்திருப்பதற்கு ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் ஆலோசனைகளே முக்கிய பின்னணியாகும் என சிங்களப் பத்திரிகையொன்று சுட்டிக்காட்டியிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அண்மையில் ரணிலின் முக்கிய எதிர்ப்பாளர் எனக் கருதப்படும் சுசில் முனசிங்கா ஜே. ஆர். ஜெயவர்த்தனா சந்திப்பும் இதையே வலியுறுத்துகின்றது.

இந்த சந்திப்பின் பின்னர், சுசில் முனசிங்க வெளிநாடொன்றுக்கு குறுகிய விஜயமொன்றை மேற்கொண்டு சென்றுள்ளார். இவரது இப்பயணமானது ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் ஆலோசனையின் பேரில் தனது ரணில் எதிர்ப்புணர்வை கைவிட வேண்டிய சூழ்நிலையை முகம் கொடுக்க வேண்டிய கட்டாயத்தை தவிர்ப்பதற்காக மேற் கொள்ளப்பட்டதா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

ரணிலுக்கெதிரான குழுவில் இடம் பெற்றுள்ள ஐ. தே. கவின் முக்கிய தலைகளின் வரிசையானது ரணில் எதிர்ப்புணர்வின் வலிமையை காட்டுவதாகவும் அமைந்துள்ளது. இந்த வரிசையில் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன, டிரோன் பெர்னாண்டோ, திலக் கருணாரட்ண ஜயலத் ஜெயவர்த்தன, வஜிர அபேவர்த்தன ஆகியோரும் இடம் பெறுகின்றனர். இதனைவிட வடமத்தி ஊவா, வட மேல், சப்ரகமுவா மாகாண சபைகளிலுள்ள கணிசமான உறுப்பினர்களும் ரணில் எதிரணியில் திரண்டுள்ளனர்.

மறுபுறம் ரணிலை எந்த நிலையிலும் ஆதரிப்பது என்ற முடிவில், ஐ.தே.க. பொதுச் செயலாளர் காமினி அத்துக்கோரள, நந்தா மத்தியு, விமல் விக்கிரமசிங்கா, காமினி லொக்குகே, தயானந்த விக்கிரமசிங்கா, மகிந்த சமரசிங்கா, றொனிடீமெல் ஆகியோரும் உறுதியாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

**நிமலராஜன்**

கட்சிக்குள் ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடியில் கட்சியின் தேசிய மகாநாடு ரணிலின் எண்ணத்தைப் போல சுமுகமாக நடக்கும் வாய்ப்புக்கள் குறைவாகவே உள்ளன. கட்சியின் பிரதித் தலைவராக சுசில் முனசிங்காவை தெரிவு செய்ய எடுக்கப்படும் முயற்சிகள் பெரிய சர்ச்சையைக் கிளப்பும் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இது ஒருபுறமிருக்க, றெஜினோல்ட் பெரேரா, 30 பாராளுமன்ற உறுப்பினர்களின் கையெழுத்துக்களுடன் மனுவொன்றை தேசிய மகாநாட்டில் சமர்ப்பிக்கப் போவதாக அறிவித்திருப்பதும் சிக்கலைத் தோற்றுவித்துள்ளது.

நெருக்கடிகளும் கருத்து மோதல்களும் வலுத்துவரும் காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சி தனது அமைப்பை தொடர்ந்து தக்கவைத்துக் கொள்ளுமா? என்ற கேள்வியுடன் ரணில் தனது கனவான் அரசியலுக்கு விடைகொடுத்து விட்டாரா என்ற கேள்விக்கும் எதிர்வரும் 17-ம் திகதி கூடவுள்ள ஐ,தே.க. தேசிய மகாநாடு பதில் கூறும் என்றே இப்போது எதிர்பார்க்கப்படுகின்றது.

ரணில் விக்கிரமசிங்கா கட்சிக்குள் தனது நிலையை வலுப்படுத்த மேற்கொள்ளும் முயற்சிகள் முற்றுமுழுதாக ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஆலோசனைகளில் எழுந்தவைதான். இதன்படி, கட்சியில் பெயருக்கு ரணில் தலைவராக இருந்தாலும் - உண்மையில் ஜே.ஆரே கட்சியின் தலைமையை தன்கையில் வைத்துள்ளார் என்பதில் சந்தேகமிருப்பதாக தெரியவில்லை.

# லண்டனை எரித்த பேக்கர்

பிரான்ஸ் தேசத்தில் அஞ்ஞாதவாசம் செய்த இரண்டாம் சார்ல்ஸ் மன்னர் அண்மையில்தான் இங்கிலாந்தின்அரியாசனத்தில் அமர்த்தப்பட்டிருந்தார்.

சென்ற ஐந்து வருடங்களாக அரச குடும்பத்திற்கு பாண் விநியோகம் செய்யும் அரசுரிமை பெற்றிருந்த, தற்பெருமையற்ற அடக்கமான பேக்கரிஉரிமையாளர் ஜோன் பரிநோர் (John Farynor) பிரத்தியேகமான முறையில் தனி வகையான நன்மதிப்பைப் பெற்றுக் கொண்டார்.

1666 ம் ஆண்டில் ஒரு நாள் பொழுது சாயும்வேளையில் வேலை செய்து களைப்புற்ற பரிநோர் புடிங்லேனில் (Pudding Lane) அமைந்துள்ள தனது பேக்கரி மேல் மாடியிலுள்ளபடுக்கை அறையில் எரிந்து கொண்டிருந்தமெழுகுவர்த்தியை அணைத்துவிட்டு அமைதியாகக் கண்ணயர்ந்தார்.

படுக்கையறைக்குச் செல்லும்போது கீழேயுள்ள பாண் போறணையில் மினுக்மினுக்கென்று எரிந்துகொண்டிருந்த ...

லாவற்றையும் கொட்டும் ஊத்தைக்கிடங்கு புடிங்லேனிலேயே இருந்தது. அங்கு மக்கள் வசிப்பதில்லை- லண்டன் பாலத்தைக் கடந்து போகும் பிரதான பாதைக்குப் பக்கத்தில் இந்த இடம் இருந்தபடியால் இது சம்பந்தமாக நகராட்சித் தலைவருக்கு அறிவிக்கப்பட்டும் அவரும் இதில் சிரத்தை எடுக்கவில்லை.

அரசாங்கத்தின் சார்பில் அன்றாடம் நாட்குறிப்பை எழுதி வைத்திருப்பவரும், தீப்பிடித்து எரியுமிடத்திலிருந்து சுமார் மூன்று மைல்களுக்கு அப்பால் வசிப்பவருமான சாமுவேல் பெப்பீஸ் (Samuel Pepys) என்பவரும் இதனைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. அவருடைய நாட்குறிப்பில் கீழே கண்டவாறு எழுதப்பட்டிருந்தது:

''அதிகாலை மூன்று மணி போல் நான் எழுந்து மேலங்கியைத் தரித்துக் கொண்டு ஜன்னலண்டை சென்று பார்த்தேன். நெருப்பு எரிந்து கொண்டிருக்குமிடம் மாக்லேனுக்கு (Mark Lane) பின்புறமாக இருக்கலாமென்று எண்ணமிட்டவாறு படுக்கை ...

... வதும் வடிந்தோடி விட்டது.

ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இரண்டு மணி தொடக்கம் புதன்கிழமை வரையிலும் தங்குதடையின்றி பாரிய அழிவை உண்டுபண்ணிவிட்ட தீயினால் 13000 வீடுகள் முற்றாக அழிந்தன. 87 கிறிஸ்தவ தேவாலயங்கள் அழிவுற்றன. அதனோடு 300 ஏக்கர் நிலம் கருகிப் போயின-

லண்டன் பாலத்தடியில் கட்டப்பட்ட விற்பனை நிலையங்களெல்லாம் எரிந்துபோனதுமன்றி தேம்ஸ் நதியின் எதிர்ப்புறத்தே பறந்த தீப்பொறி சௌத்வாக் (South Wark) என்னும் பகுதியில் ஆங்காங்கே தீயை மூட்டிவிட்டதனால் லண்டன் மாநகராட்சி மண்டபம் (GuildHall) அரசாங்க நாணய மாற்று மண்டபம் (Royal Exchange ஆகியநகரநிதிபரிபாலனமையங்களும் முற்றாகச் சாம்பலாகி விட்டன.

தீயினால் ஏற்பட்ட மிகப் பெரிய பாதிப்பு சென்ற்போல்ஸ் (StPaul's) கதீட்ரலில் நிகழ்ந்து விட்டது. தீச்சுவாலையிலெழுந்த வெப்பச் சூட்டினால் அங்குள்ள பழமை வாய்ந்த கல்லறைகள் வெடி...

# யாழ். மாநகர சபை தீயணைப்பு

# படையினருடன் ஒரு சந்திப்பு

வானளாவ கொழுந்து விட்டெரியும் தீ நாக்களுக்கிடையில் புகுந்து-தீயை அணைப்பதில் எல்லோராலும் ஈடுபட முடியாது அருகே வந்து தீண்டும் தீயோடும், எரிந்துஎரிந்து விழும் கட்டிட இடிபாடுகளிடையும் புகுந்து உயிர்களை காப்பதற்கு தனியே பயிற்சி மட்டுமல்லாது- மனோதிடமும் வேண்டும் இந்தவகையில் தீயணைப்பு படையினர் வளர்ந்து வரும் உலகில் அவசியமான நபர்களாக உள்ளனர்.

யாழ்ப்பாணத்திலும் தீயணைப்பு படைப்பிரிவொன்று இயங்கி வருவது சிலருக்கு தெரிந்தாலும் பலருக்குத் தெரியாத விடயமாகும் யாழ் மாநகரசபை எல்லைக்குள்ளும் - அதற்கப்பால் 25 மைல் சுற்றாடல் வரையிலும் தன் பணிகளை ஆற்றக் காத்திருக்கும்- யாழ் மாநகரசபையின்தீயணைப்பு படைப்பிரிவின் பொறுப்பாளர். சிதம்பரநாதன் ஆனந்தராஜாவை அண்மையில் சந்தித்தோம் தீயணைத்தல் மற்றும் அதனோடிணைந்த சேவைகள் பற்றி அவர்கூறிய விபரங்களை இங்கே தருகின்றோம்.

1986இல் ஆரம்பிக்கப்பட்ட தீயணைப்புப்பிரிவு -ஒன்பதாவது ஆண்டாக தன் சேவையை தொடர்ந்து கொண்டிருக்கின்றது. தீயணைத்தலில் நன்கு பயிற்றப்பட்ட பதினொரு ஊழியர்கள் இங்கு கடமையாற்றி வருகின்றனர், இன்னும் பத்துப்பேர் வரையில் பயிற்சிக்கென தெரிவு செய்யப்பட்டுள்ளனர்

தீச்சம்பவம் பற்றிய தகவல் கிடைத்ததும் எட்டுப் பேரடங்கியதீயணைப்புபடைப்பிரிவு உடனடித் தேவைகளுக்கான சகல உபகரணங்களோடு தீயணைப்புவண்டியில் புறப்பட்டு செல்லும்

இப்பிரிவில் தீயணைப்பு வாசனத்தையும், தீயணைப்புக் கருவியின்கட்டுப்பாட்டையும் இயக்கும் ஒருவரும், தீச்சம்பவம் நடைபெற்ற இடத்தின் நிலைகளை அவதானிப்பதற்கு ஒருவரும் அதன்படி தீயை அணைக்கக்கூடிய இடங்களை சுட்டிக்காட்டி வழிநடத்த ஒருவரும் இடம் பெறுவர் ஊழியர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால் பல பொறுப்புக்களையும் ஒருவரே கவனிக்க வேண்டிய நிலையும் உள்ளது.

தீயை அணைக்கும்போது இரண்டு விடயங்கள் உடனடியாக கவனிக்கப்படும். தீ உண்டாகிய காரணம் தீஉண்டாகிய இடமும் அறியப்படும் தீ ஏற்பட்ட காரணத்தைக் கொண்டே எவ்வகையான தீயணைப்பான்களை பாவிக்கப்போகின்றோம் என்பது தீர்மானிக்கப்படும். தீ உண்டாகும்இடத்தைஅறிந்து அங்கிருந்தே தீயணைத்தல் வேலைகள் ஆரம்பமாகும். அத்தோடு இலகுவில்பரவக்கூடிய இடங்களும் கூடுதல்கவனத்தில் கொண்டுவரப்படும். எரிந்துபோனஇடங்களை முதலில் பூழுமையாக கவனிக்க முடியாது ஏனெனில் எரிந்ததை நாம் திரும்ப பெற முடியாது.எனவேபரவக்கூடிய இடங்களில் வைத்து தீயை அணைப்பது முக்கியமானது.

தீயணைத்தலில் உதவவென வரும் பொதுமக்கள் கூடுதலாகஉபத்திரவமே செய்கிறார்கள். வேறு நோக்கங்களை நிறைவேற்ற எங்களோடு நின்று பயன்படுத்த நினைப்போரையும் நாம் கண்டிருக்கிறோம். இப்படியானவர்களால் எங்களுக்கு சிரமமே ஏற்படுகின்றது. எங்களது பணியை ஆரம்பிக்க விடாமல் - தீச்சம்பவம் நடக்கும் இடத்தை வேடிக்கை கடினமாக இருக்கும். உண்மையில் உதவ வேண்டுமென நினைப்பவர்களுக்கோ பயிற்சி இருக்காது என்பதும் கவனிக்கத்தக்கது.

அவ்வாறானவர்கள் நாங்கள் கோருவனவற்றை செய்தலே போதுமானது.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை குண்டு வீச்சு, எறிகணை வீச்சுக்களால் பெரியளவில் தீ எழுவதில்லை. சுன்னாகம் மின் நிலையத்தின் மேல் வீசப்பட்ட விமானக் குண்டினால் ஏற்பட்ட தீயை அணைத்ததுஎங்களால் செய்யப்பட்ட பெரியதொரு நடவடிக்கை. இதனைவிட மக்களின் கவனக்குறைவால் தீச்சம்பவங்கள் கூடுதலாக ஏற்படுகின்றன. உதாரணமாக எரிபொருட்களை அலட்சியமாக தீக்கருகில் பாவிப்பது ஒரு எண்ணெய் பரலொன்று தீப்பிடித்து வெடிக்குமானால் அது ஏற்படுத்தும் சேதத்தை அறிந்து கொள்ளாமல், சில மண்ணெண்ணெய் கடைகளில் நடக்கும் அலட்சியப் போக்குகளை நேரிலே கண்டு திருத்தியிருக்கிறோம்.

எங்களது தீயணைப்பு வேலைகளைக் கருதினால் 86 - 16, 87 - 9, 88 - 7, 89-11, 90-8, 91-5, 92 - 5, 93 - 4, 94 - 4 எனச் செல்கின்றன. மின்சாரம் இல்லாததால் மின் ஒழுக்குகளால் ஏற்படும் சம்பவங்களும் குறைந்துள்ளன. பார்ப்பவர்களை அகற்றுவது தீயணைப்பு வேலையை விட தனிமனிதர் ஒருவரை தீபற்றிக் கொண்டால் - அவரை வெறுமனே நிலத்தில் போட்டு உருட்டக் கூடாது. நிலத்திலுள்ள சிறுகற்களே அவரது காயங்களை பெரிதாக்கிவிடும் தடித்த போர்வை, சாக்கை சுற்றி தீயை அணைக்க முயல வேண்டும். கூடுமான வரை தீபிடித்த ஆடைகளை உடலிலிருந்து அப்புறப்படுத்தவேண்டும். அனைவருமே தீவிபத்துக்களில் செய்ய வேண்டிய முதலுதவிகளை அறிந்திருப்பது நல்லது.

தீயணைத்தலில் தீயில் சிக்குண்ட உயிர்களை காப்பாற்ற முதலில் முயற்சிக்கவேண்டும் இதற்காகவே உயிர்களை இழந்த தீயணைப்பு வீரர்களும் இருக்கின்றார்கள் தனது கடமையை நினைத்து துணிந்து செயற்பட வேண்டியது ஒவ்வொரு தீயணைப்பு வீரனதும் பொறுப்பாகும்.

அடர்ந்த தீ பரவும் போது ரிமோட் கன்ட்ரோல் மூலம் தண்ணீர் தாங்கிகளை தீயினுள் செலுத்தி அணைக்கும் முறைகளும் மேலைநாடுகளில் பின்பற்றப்படுகின்றது. ஆகாய மார்க்கமாக இரசாயன பதார்த்தங்களை தூவியும் தீ அணைக்கப்படுகின்றது

தீயணைப்பிற்கு நீரைத் தவிர நுரைதீயணைப்புக்கருவி இரசாயனத் தூள் தீயணை கருவி, காபனீரொட்சைட் தீயணைக்கருவி, சோடா- அமில தீயணை கருவி என்பனவும் பயன்படுத்தப்படுகின்றன நீரினது அழுத்தத்தை அதிகரித்தும் தீயை அணைக்கலாம்.

தீயால் ஏற்படும் அபாயத்தைக் கட்டுப்படுத்துவதற்கு முதலில் பிரிட்டனே நடவடிக்கைகளை மேற்கொண்டது. இன்று ‘றிமோட் கொன்றோலர்’ தீயணைப்பு முறைகள் வளர்ச்சி கண்டுள்ள போதும், தினமும் பிரிட்டனில் 1.25 மில். பவுண் தீ விபத்தால் இழக்கப்படுகின்றது என்றார் ஆனந்தராஜா.

**பார்த்தீபன்**

---

போறணையில் மினுக்மினுக்கென்று எரிந்துகொண்டிருந்த தீச்சுடரை தண்ணீர் விட்டு அணைத்து விட மறந்துவிட்டார்.

1666ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 2-ம்திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இரண்டு மணியளவில் பேக்கரியிலிருந்து கிழம்பிய தீப்பொறி மிகமோசமான தீச்சுவாலையாக மாறி லண்டன் மாநகரை எரித்துச் சாம்பலாக்கிய சம்பவம் உலக சரித்திரத்தில் இடம் பெற்று விட்டது.

ஜோன் பரிநோரின் பேக்கரியிலிருந்து கிளம்பிய நெருப்புப்பொறி பக்கத்தேயுள்ள விடுதிவளவில் குவித்து வைக்கப்பட்டிருந்த வைக்கோல் போரில் பற்றிக் கொண்டு காற்றோடு கலந்து தீ எங்கும் பரவி வானளாவ ஒளியைப் பரப்பவிட்டது.

புராதன லண்டன் நகரில் ஜனநெருக்கம் நிறைந்தமையப்பகுதியில் புடிங்லேன் இருந்தது தீச்சுவாலையைக் காண்பதற்கு ஆயிரக்கணக்ான உள்ளூர் வாசிகள் சாலை எங்கும் கூடிவிட்டார்களாயினும் எவரும் நெருப்பு பரவக் கூடுமென்று எதிர்பார்க்கவில்லை,

கடசல் யந்திரங்களும். பிளாஸ்திரி உற்பத்தி செய்யும் தொழில் சாலைகளும், அநேக மரக்காலைகளும் நிறைந்த நகரமானதால் அடிக்கடி அங்கு தீபற்றிக் கொள்வது சர்வசாதாரணமாக இருந்தது.

ஒரு வருடத்திற்கு முன்பு சார்ல்ஸ் மன்னர் தீயணைக்கும் சட்டத்தைக் கண்டிப்பாக அமுல் செய்யும்படி லோட் மேயரை (**Lord Mayor**) பணித்திருந்தாராயினும் இதற்கு முன்பு எழுந்த தீயினால் எதுவிதமான அசம்பாவிதங்களுமின்றிப் புகைந்து போனது போல் இன்றும் அவ்விதமே முடியுமென்றெண்ணினார்கள்.

சிழக்கேயுள்ள சந்தையிலிருந்து வரும் இறைச்சி மாமிசக் கழிவுப் பொருள்களெல்

புறமாக இருக்கலாமென்று எண்ணமிட்டவாறு படுக்கையில் படுத்து உறங்கி விட்டேன்.’’

---

தமிழில்

**கே. சி. இராமநாதன்**

---

அன்று ஞாயிற்றுக்கிழமை மத்தியானம் நாட்குறிப்பாளர் பெப்பீஸ் நெருப்பு எரியும் விஷயத்தை கோர்ட்டாருக்கும், அரசருக்கும் அறியப்படுத்தினார். அதுவரையிலும் எவரும் இதில் சிரத்தை காட்டவில்லை.

முன்பு நிகழ்ந்தது போல் இன்றும் தானாகவே தீ அணைந்து விடுமென்ற எண்ணம் மக்களிடமிருந்து வெகு விரைவில் நீங்கி விட்டது. அன்று பிற்பகல் தீச்சுவாலை தேம்ஸ் நதிக்கரையையும் கடந்து அங்குள்ள பண்டகசாலைகளை அண்மித்து விட்டது.

மரச்சாமான், எண்ணெய், பிறண்டி, நிலக்கரி முதலான பொருள்கள் நிறைந்துள்ள பண்டகசாலைகள் ஒன்றன் பின்னொன்றாக வெடிகுண்டுகளினால் தாக்கப்படுவது போன்று வெடித்துச்சிதறின.

கிழக்கேயிருந்து வறண்ட காற்று தொடர்ந்து வீசிக் கொண்டிருந்ததனால் பெப்பீசின் (**Papy's**) வீட்டிற்குக் கிட்ட நெருங்கி வந்து கொண்டிருந்த தீச்சுவாலை கட்டுப்பாடின்றி மேற்குப் பக்கமாக பரவத் தொடங்கியது.

ஞாயிற்றுக்கிழமையன்றே தீயின் முன்னேற்றப் பாதையில் ஒருகட்டத்தில் அதனை தடுத்து விடக் கூடிய வாய்ப்பு இருந்தும் தீயணைக்கும் படையினரின் அவசர புத்தியால் அது நிறைவேறாது போய் விட்டது. குழாய் மூடிகளை உடைத்து விட்டால் தண்ணீர் விரைவாகப் பெற்றுக் கொள்ளலாமென்பதற்காக வெளிப் போக்குக் குழாய் வாய் மூடிகளை உடைத்து விட்டார்கள். இதனால் தண்ணீர் முழு

டினால் அங்குள்ள பழமைவாய்ந்த கல்லறைகள் வெடித்துச் சிதறி அதனுள் தைலமிட்டுப் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த ஞாபகச் சின்னங்கள் அழிவுற்றன. கடும் வெப்பத்தினால் கதீட்ரலின் மேற் கூரைத் தகடுகள் உருகி விட்டன. உருகிப் போன ஈயக்குழம்பு பக்கத்தேயுள்ள சாலையில் வழிந்தோடின.

இந்தப் பாரிய தீவிபத்தில் பலியானவர்களின் தொகை எட்டுப் பேரென்பது குறுப்பிடத்தக்கது. அனேகமான நகரவாசிகள் அங்கிருந்து தப்பி ஓடுவதற்குப் போதிய அவகாசம் இருந்தது.

தங்களின்உடைமைகளை ஏற்றிக் கொண்டு ஓடும் கைவண்டிகள் சாலையின் இருமருங்கும் அடைத்துக் கொண்டு இருந்தன. பக்கத்தேயுள்ள கிராமப்புறங்களில் தஞ்சம் புகுந்த அகதிகள்முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர்.

நாட்குறிப்பாளர் பெப்பீஸ் (**Pepys**) அவர்களும் அகதிகளில் ஒருவராக இருந்தார். அவரினால் எழுதப்பட்ட டயறிக் குறிப்பு பின்வருமாறு:-

‘‘பயங்கரமான தீமைபயக்கும் கொடிய தீயினால் காற்றடிக்கும் பக்கம் முகத்தை நீட்டினால் மழைத்துளிகள் போல் விழும் நெருப்புத் துளிகள் உங்களை எரித்து விடுவது திண்ணம். இதற்கு மேலாகபுகைமண்டலம் சூரியனை முற்றாக மறைத்து விட்டது. அந்த மதிய நேரத்திலும் புகைமண்டலத்திற்கு ஊடாக வரும் சூரியனின் தோற்றமானது இரத்தச் சிவப்பாக இருந்தது’’

அரசனின் ஆணைப்படி தீயணைக்கும் படையினர் தீயை மேலும் பரவ விடாமல் இடைப்பட்ட கட்டடங்களையெல்லாம் இடித்து விட்டபடியால் புதன் கிழமை இரவு நெருப்பு அடங்கிவிட்டதென்பது உண்மையாயினும் கிழமைக்கணக்காக லண்டன் மாநகரம் தீச் சுவாலையை

( 6 ஆம் பக்கம் பார்க்க )

### செவ்வாயின்

களோட போகேக்ககூட தங்கட சாவின்ரை நேரத்தை தெளிவாக தெரிஞ்சிருந்தும் உணர்வுகளை சிதறவிடாம இலக்கை தாக்கி அழிக்கிறது எப்படிப்பட்ட வீரம்தம்பிஇது புகழை விரும்பிறவை செய்யட்டும் பார்ப்பம். ...இதெல்லாம் சும்மாவராது. எங்கட தம்பி பிரபாகரன் வளர்த்த வளர்ப்பிது''

''ஆரு மிஸ்டர் பிரபாவை சொல்லுறியளோ'' என்றான் விமல்.

கிழவர் இவ்வாறு சொல்லிக்கொண்டு போகப் போக ஜெனரல் கொப்பேகடுவ அதிர்ச்சியுடன் கூடிய உணர்ச்சிக் கொந்தளிப்பில் மூழ்கித் துடித்தார்.

❁ ❁ ❁

செவ்வாய் மண்டலத்தில்

பேராசிரியர் மித்திரா பரபரப்படைந்தார்.

''ஓ! கடவுளே, உணர்ச்சிகள் அதிகமாகச் சிதறியதால் கொப்பேயின் உடல் பற்றி எரியத் தொடங்கி விட்டது. அதுமட்டுமல்ல அதைக்கண்டு பதறிய விமலின் உடலும் தீப்பிடித்து விட்டது''

என கத்திய மித்திரா

பல கம்பியூட்டர்களை இயக்கினார். பலனில்லை.

இறுதியில் இருவரின் புது உடல்களும்

ஈழத்துக் காற்றில்கலந்தன.

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
## ஆண்டு ஆறு அநுமதி - 1995

1994 ஆகஸ்டில் நடைபெற்ற ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளின் பிரகாரம் மாணவர்களுக்கு எமது கல்லூரியில் ஆண்டு 6இல் அநுமதி வழங்கப்படவுள்ளது.

இவ் அநுமதிக்கான விண்ணப்பப்படிவத்தைக் கல்லூரி அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவு திகதி 15-12-1994**

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம், 1994-12-01

அதிபர்

(சி-10816)

## அனுமதிப் படிவங்கள்

யாழ்ப்பாணம், தொழிநுட்பக் கல்லூரி 1995-ம் கல்வியாண்டிற்கான மாணவர் அனுமதிப் படிவங்களை கல்லூரியில் பெற்றுக் கொள்ள முடியும்.

-தலைவர்

யாழ்/பல்தொழிநுட்ப நிறுவன ஊழியர்
சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்,
தொழிநுட்பக் கல்லூரி,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்,
1994.11.30.

(சி-10813)

## தொழிநுட்பக் கல்லூரிக்கான
## அனுமதி - 1995
### யாழ்ப்பாணம்

1995-ம் கல்வியாண்டிற்கான மாணவர் அனுமதி பற்றியவிபரங்கள் 1994 நவெம்பர் 11ம்திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அதிற் குறிப்பிட்ட பாடநெறிகளுடன், 'வியாபாரமும் நிதியியலிலுமான தேசிய திப்புளோமாப் பயிற்சி நெறிக்குமான விண்ணப்பங்கள்,1994 டிசெம்பர் 23ம் திகதிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

விண்ணப்பங்களை உரிய படிவத்தில் ''அதிபர் தொழி

# யுத்தக் களங்களில்!

உலகத்தில் முதன்முதலில் ஆரம்பிக்கப்பட்ட மருத்துவ மனை என கருதப்படுகிறது. இந்த மருத்துவப்பிரிவு அலெஸ்ஸாண்டிரோ ரைபெரி (Alessandro Riberi) என்கிற சத்திர சிகிச்சை நிபுணரால் (1796 - 1861) விக்டர் இமானுவேல் 11 ஆட்சிக்காலத்தில் புனரமைப்புச்செய்யப்பட்டது. 1851 -ல் கியோரானேல் டி மெடிசினா மிலிற்றரி (Giornale di Medicina Military) என்கிற இராணுவ மருத்துவப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.

ஆதிகாலத்து கொன்சிக்லியோ (Consiglio) மருத்துவப்பிரிவு தோன்றிய இத்தாலிய சாம்ராஜ்யத்தில் 'கொமிற்றாற்றோ டி சனிற்றா மிலிற்றரி' (Commitato di Sanita Military) என உருவாக்கம் பெற்று 1875 -ல் ரோம் நகரத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டது. இது பின்னர் 1920 -ல், டைரிசியோன் சென்றாலேடி சனிற்றா' மிலிற்றரி (Direzoine centrale de Sanita) இனால் மாற்றீடுசெய்யப்பட்டது.1883இல் புளோரன்சில் (Florence) ஒரு இராணுவ மருத்துவ நிலையம் திறக்கப்பட்டது.

மயக்க மருந்தும், கிருமிநீக்கிகளும் கண்டுபிடிக்கப்பட்டது காயப்பட்ட போர்வீரர்களின் அவஸ்தைகளுக்கு ஓர் அருமருந்தாக அமைந்தது. குறிப்பாக ஜி. குறோஸ்ஸிச் (G. Grossich) னால் 1910-ல் களத்தில் காயப்படுகின்ற புண்களுக்குப் போடுவதற்கென கண்டுபிடித்த 'டின்ஜர் அயடின்' (Trinctire of Iodine) காயங்களை ஆற்றுவதில் பெரும் பங்கை வகித்தது.ரொன்றெகனால் கண்டுபிடிக்கப்பட்ட டை நோய்களையும், முறிவுகளையும் இனங்காண பெரிதும் உதவி செய்தது. 1896-ல் பிரிட்டிஷ் இத்தாலிய இராணுவங்கள் இதனைப் பயன்படுத்தத் தொடங்கி விட்டனர்.

19-ம் நூற்றாண்டின் முடிவிலிருந்து மருத்துவப் பிரிவு அநேகமான நாட்டு இராணுவக் கடற்படைக் கட்டமைப்புக்களின் இன்றியமையாத அங்கமாகத் தோற்றம் பெற்றது.

### முதலாம் உலகப்போரின் போது மருத்துவ நிபுணர்களின் பங்களிப்பு

முதலாம் உலகமகா யுத்தத்திற்கு சற்று முன்னர் மேற்கொள்ளப்பட்ட பல்வேறுவிதமான சுகாதார நடைமுறைகளும் நெருப்புக்காய்ச்சல், ஏற்புவலி என்பவற்றிற்கு எதிராகக் கண்டுபிடிக்கப்பட்ட தடுப்பூசிகள், நோய்களைப் பரப்பும் காவிகளைப் பற்றிய அறிவு, சப்ளைகளில் ஏற்ப

நின்ற இராணுவத்தினருக்கும் தள மருத்துவமனைகளுக்கும் வழங்கினர்.செயற்கை உணவுகளைத் தயாரிக்கும்ஆய்வுகூட ஆய்வாளர்கள்முதற்கொண்டு விமானங்களில் பறக்கின்ற போது உடலில் ஏற்படும் மாற்றங்களைஆராயும் உடற்றொழிலியலாளர்களும், களத்தில் முன்னணியிலும், பின்னணியிலும் நின்ற நுண்ணுயிர்க்கிருமி ஆய்வாளர்களும் (Bacteriologist) புதியநோய்களைப் பற்றிய ஆராய்ச்சியாளர்களும், காது, மூக்கு, தொண்டை மற்றும் கண் சிகிச்சை, மனநோய் நிபுணர்களுக்கு யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிப்பதன் மூலம் நிறைய கற்கவும் அனுபவம் பெறவும் வாய்ப்புக் கிடைத்தது ஒரே நேரத்தில் பெருமளவில் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கவும், சிக்கலான மருத்துவப் பிரச்சினைகளைக்கையாளவும் மருத்துவர்களுக்கு பெருமளவில் வாய்ப்புக் கிடைத்தது.

மகாயுத்தத்தினால் தோன்றிய பிரச்சினைகளால் மனிதகுலத்திற்கு ஏற்பட்ட அழிவுகளையும் பயங்கரத்தினையும் எதிர்கொள்ளுமுகமாக மருத்துவத்தின் அனைத்துக் கிளைகளும் அதனுடைய வளங்களும் ஒன்று திரட்டப்பட்டு பயன்படுத்தப்பட்டது. வயிற்றுப்பகுதி, மூளை நரம்புத் தொகுதி, விசேடமாக சிதைந்துபோன உறுப்புக்களை சத்திர சிகிச்சை மூலம் மீள உருப்பெறச் செய்தல் [Renonstructive Surgery] போன்ற சத்திர சிகிச்சைகள் பெரும் வெற்றியைத் தந்தன.

குறிப்பாக கர்வி குஸ்ஸிங், ஜி. சிறில், அலெக்ஸ் கரெல் ஆர் பெத்னொட் லேன், சீ. வில்லியம்ஸ் மோர்செற்றின், டவ்விர், சுற்றோபஸ் ஸெற்றெயினெல்லி, ரெபேட் ஜோன்ஸ், கோல்ட் வெய்த் ஒஸ்குட், அலிசன், கில்விஸ் வலடியர் ஆகியோர் உலக மகாயுத்தத்தின் போது களத்தில் பல்லாயிரக்கணக்கானோரின் உயிர்களையும் உறுப்புக்களையும் பாதுகாத்ததோடு சத்திர சிகிச்சைத் துறையிலும் பெரும் சாதனைகளையும் படைத்தார்கள். இவர்களுக்கு செஞ்சிலுவைச் சங்கங்கள் அளித்த உதவியும் அளப்பரியது. தொற்றுநோய்க் கிருமிகளால் பரவுகின்ற நோய்களும் வெகுவாகக்கட்டுப்படுத்தப்பட்டது. மருத்துவ சரித்திரத்தில் முதன்முறையாக யுத்தத்தின் போது களத்தில் காயப்பட்டு இறப்பவர்களைவிட தொற்று நோயினால் இறப்பவர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது.

டினாலும் பெருமளவுபேர் இறப்பதைத் தடுத்து நிறுத்தியது. ஆனாலும் இங்கு மக்களிடையே பெரும் எடுப்பிலான இடப்பெயர்ச்சி, புதியவர்களைச்சேர்த்துக்கொண்டமை, புதிய குழலுக்கு பழக்கமின்மை போன்ற பிரச்சினைகளால் மூளைக்காய்ச்சல்,நியூமோனியாக்காய்ச்சல் என்பவற்றால் ஆயிரக்கணக்கில் மக்களும் இராணுவத்தினரும் இறந்தனர். 1918-1919ல் பெருமெடுப்பில் பரவிய சுவாசத்தொகுதியைப் பாதிக்கின்ற தொற்று நோயினால் சண்டையில் ஈடுபட்ட நாடுகளில் களத்தில் இறந்தவர்களை விட மிக அதிகமான மக்களும் இராணுவமும் பலியாகினர்.

இராணுவக் கட்டமைப்பினுள் மருத்துவப் பிரிவை மிக உன்னதமான உயர் நிலைக்குக் கட்டி எழுப்பப்பட வேண்டிய தேவையைஉணர்த்திற்று மேலும் இவ்வாறான யுத்தங்களின்போது யுத்த முனைக்கு மிக அருகாமையில் தள மருத்துவ மனைகள் தற்காலிகமேனும் அமைப்பதன் மூலம் காயப்பட்டவர்களுக்கும் நோய்வாய்ப்பட்டவர்களுக்கும் விரைவான திறமையான சிகிச்சை அளிக்கப்படுவதன் மூலம் சண்டைகளினால் ஏராளமானோர் இறப்பதைத் தடுத்து நிறுத்தலாம் என்பதும் தெளிவாகப் புலனாகியது. மேலும் ஒவ்வொரு இராணுவ சிப்பாயிடமும் முதலுதவிப் பொருட்கள், காயப்பட்டவரை மிக விரைவாக மாற்றஞ்செய்யக்கூடிய இராணுவப்பிரிவு, சிகிச்சை நிலையங்கள்,

- நடமாடும் மருத்துவமனைகள் (Mobile Hospitals)
- தள மருத்துவ மனைகள் (Base Hospitals),
- அம்புலன்ஸ் வசதியுள்ள புகையிரதம் (Ambulance trains)
- மருத்துவக் கப்பல்கள் (Hospital Ships)
- விமானப் போக்குவரத்து (Airplane transports)

போன்றவற்றினால் களத்தில் காயப்படுபவர்களுக்கும் பொதுமக்களுக்கும் ஏற்படும் உயிராபத்துக்களைக்குறைக்கலாம் என்கிற சிந்தனைகளும் தோற்றம் பெற்றன.

### லண்டனை

வெளிக்காட்டாது உள்ளூர எரிந்து கொண்டிருந்தது.

ஆறு மாதங்கள் சென்ற பின்பும் பூமிமட்டத்தின் கீழ் உஷ்ணம் தணியவில்லை.

பேக்கரி உரிமையாளர் ஜோன் பரிநோரின் அறியாமையினால் ஏற்பட்ட பெரும் பிழையாயினும் இதனால் ஓரளவு நன்மையும் ஏற்பட்டதென்றே சொல்லவேண்டும்.

லண்டன் நடுமையத்தில்

## யாழ் வணிகர் கழகம்
## முக்கிய கலந்துரையாடல்

யாழ். வணிகர் கழக எல்லைக்குட்பட்ட சகல வணிகர்களுக்கும் ஓர் முக்கிய கலந்துரையாடல் யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் 2-12-94 வெள்ளிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு நடைபெறவுள்ளதால் யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட சகல வணிக நிலைய உரிமையாளர்களும் தவறாது கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கழகத்தின் சார்பில் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி, வணக்கம்.

(சி-10807) பொதுச் செயலாளர்

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
26-6-1971

வீரச்சாவு
2-12-1992

### 2-ம் லெப். குலமகள்/ ஜெமிலா
(முருகையா மாலா)

அளவெட்டியில் ஊற்றெடுத்து -அஞ்சா
நெஞ்சுடன் கயவர் கதை முடித்தாய்
புலி பசித்தாலும் புல் தின்னாது
தமிழ் அழிந்தாலும் அடிமைப்படாது- எனச்
சீறிட்ட சிறுத்தையே
தமிழ் குலம் காக்க குலமகளாய் செருக்கோடு
செங்களம் ஆடியே பாய்ந்திட்ட வேங்கையே
தாயகம் வேண்டியே ஈழ தாயை நேசித்தாய்
தாய் கையிருக்கும் விலங்கிற்கு அடி கொடுத்தாய்
பாதி உயிர் போய்விட்ட படையாளும் பலாலியிலே
மண்காத்து மரணித்த மாலா
விடுதலைக்கு வித்தாகி வேரூன்றிய ஈராண்டில்
உன் நினைவு உறுகின்றோம்.

வில்லியம் வீதி
நாவாந்துறை (10250) - குடும்பத்தினர்

## உஆம் ஆண்டு நினைவலைகள்

ணப்பங்கள், 1994 டிசெம்பர் 23ம் திகதிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

விண்ணப்பங்களை உரிய படிவத்தில் ''அதிபர் தொழி நுட்பக்கல்லூரி, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்'' என்ற முகவரிக்கு மேற்படி திகதிக்கு முன்னர் கிடைக்கத் தக்கதாக பதிவு அஞ்சலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். மேலதிக விபரங்கட்கு யாழ். தொழி நுட்பக் கல்லூரியில் தொடர்பு கொள்ளவும்.

க. ஜெயரத்தினம்
அதிபர்

தொழிநுட்பக் கல்லூரி,
பிறவுண் வீதி,
